இறையருள்
IRAI ARUL
THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 19 No : 11 NOVEMBER 2015

*Editorial Board*

*Patron*
**His Excellency**
**Mar George Rajendran SDB**

*Chief Editor*
**Fr. Joseph Santhosh**

*Executive Editor*
**Mr. Soundara Raj**

*Associate Editors*
**Fr. K.J. Antony SDB**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Printed at
**Pulari Offset Press**
**Thuckalay.**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 2 |
| பேராயர் மடல் | 13 |
| ஆயர் திருமுகம் | 19 |
| அருட்பணிப்பேரவை | 24 |
| இரக்கத்தின் ஆண்டு | 27 |
| சபை நாள்... | 30 |
| நற்செய்தி நிலையம் | 32 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 36 |
| இளையோர் இயக்கம் | 38 |
| மரியாயின் சேனை | 39 |
| வின்சென்ட் தே பவுல் | 41 |
| இல்வாழ்வு இயக்கம் | 42 |
| அல்போன்சா கல்லூரி | 44 |
| முதல் வார்த்தைப்பாடு | 47 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 48 |
| திருப்பணியாளர் பயிற்சி | 50 |
| Bishop's Engagements | 52 |

## BISHOP'S MESSAGE

Ref. No. Priests/GR/49/2015 28 October 2015

Greetings in the Lord Jesus!

**REFLECTIONS ON CATHOLIC FAMILIES**

The months of September and October have witnessed the unfolding of two important events on the theme of family, namely, the *World Meeting of Families* and the *Synod of Bishops* on the Family. The *World Meeting of Families* is an occasion when families from around the world gather to pray, learn and celebrate the gift of the family. St. John Paul II started this worldwide celebration in 1994 in order to promote the pastoral care of families, and to protect their rights and dignity in the Church and in civil society, so that they realize more fully their vocation. Held every three years, the *World Meeting of Families* is the world's largest gathering of Catholic families. The eighth such meeting - and the largest so far - was held from 22-27 September 2015 in Philadelphia, in which Pope Francis took part. The theme of the Philadelphia meeting was "Love is Our Mission: The Family Fully Alive." The entire event emphasized the centrality of love in the family and the impact of the family in our society.

The *Fourteenth Ordinary Assembly of the Synod of Bishops* began on 4 October 2015 concluded on 25 October 2015. The Synod brought to a conclusion the study on the challenges and problems facing the family in today's world, a discussion that was started by the Synod last year. The theme of the Synod was "the Vocation and Mission of the Family in the Church and the Contemporary World." While the Synod was in session, on 18 October 2015 Pope Francis canonized the parents of St. Theresa of the Child Jesus, Louis Martin and Marie Zélie Guerin placing them as models for Catholic families.

The working document of the Synod had three parts, the *Challenges of the Family*, the *Vocation of the Family* and the

*Mission of the Family Today.* This document proposed to *look* at the reality of the family today in all its complexities; to *listen* with renewed freshness and enthusiasm, what revelation tells us about the beauty, the role and the dignity of the family; and, to *confront and discern* the ways in which the Church and society can renew their commitment to the family founded upon the marriage between a man and a woman.

Despite the many signs of crisis in the institution of the family in various parts of the world, the desire to marry and form a family remains vibrant, especially among young people. The family is uniquely important to the Church and, in these times, the family needs to be rediscovered as the essential agent in the work of evangelization.

The family, in addition to being called upon to respond to today's challenges, is also called by God to an ever-increasing awareness of its missionary identity as a domestic Church. In a world often marked by loneliness and sadness, the Gospel of the Family is indeed good news.

Anthropological and cultural changes in our times influence all aspects of life. On the positive side there is greater freedom of expression and a better recognition of the rights of women and children. On the other hand, equal consideration needs to be given to the growing dangers represented by individualism, which deforms family bonds. Added to this is the crisis of faith, witnessed among many Catholics, which oftentimes underlies the crisis in marriage and the family.

It is a fact that many people in the world do not support, encourage or live the Catholic Church's teaching on marriage and the family. In various cultures young people are displaying a fear to make definitive commitments, including a commitment concerning forming a family.

**The Family: An Irreplaceable Resource of Society**

The family is still, and will always remain, the fundamental and indispensable pillar of social life. The family represents a

fundamental value and an irreplaceable resource for the harmonious development of every human society. Vatican II states: "The family is a school for human enrichment ... and the foundation of society" (GS 52). In the relations in a family - marital, filial and fraternal - all family members willingly establish strong ties, in harmony and mutual respect, which permit them to overcome the dangers of isolation and loneliness. Since the family is the leading agent in building society, adequate public policies on behalf of the family are necessary, which support and promote the family.

**The Family and Faith**

Pope Francis, in his Encyclical *Lumen Fidei*, treating the connection between the family and faith, writes: "Encountering Christ, letting themselves be caught up in and guided by his love, enlarges the horizons of existence, gives it a firm hope which will not disappoint. Faith is no refuge for the fainthearted, but something, which enhances our lives. It makes us aware of a magnificent calling, the vocation of love. It assures us that this love is trustworthy and worth embracing, for it is based on God's faithfulness which is stronger than our every weakness" (LF 53). The primacy of grace, therefore, needs to be highlighted. It is a question of allowing people to experience that the Gospel of the Family is a joy that 'fills hearts and lives,' because in Christ we are 'set free from sin, sorrow, inner emptiness, and loneliness' (EG 1).

**Catechesis and the Family**

The Christian community is a place where families are born and where they meet and interact as they walk together in faith and share ways of growth and mutual exchange. In this regard, we need to impart catechesis to married couples together with their children. It demonstrates that the vocation of marriage is an important reality, which requires an adequate preparation for a reasonable period of time. For this purpose, the catechetical programme for the family needs to be strengthened and promoted in a much more vibrant manner.

We need to instill in families a sense of belonging to the Church, a sense of 'we' in which no member is forgotten. Likewise, every family within the Church ought to rediscover the joy of communion with other families so as to serve the common good of society by promoting a public policy, an economy and a culture in service of the family, even through the use of the social network and the media. This calls for the ability to create small communities of families as living witnesses of Gospel values. Some families need to be prepared, trained and empowered so they can accompany other families in living in a Christian manner. Families who are willing to assume the mission *ad gentes* are to be acknowledged and encouraged.

**Indissolubility of marriage: a Gift and Task**

Indissolubility represents a personal response to the profound desire for mutual and enduring love: a 'never-ending' love which becomes a choice and a gift of one's self, a gift made by each spouse to the other, sealing the couple's relation to God himself and all that God entrusts to them. Particularly important from this perspective is the celebration of wedding anniversaries in the Christian community so as to recall that, if a marriage is grounded in Christ, permanently living together as a couple is not only possible but also a beautiful experience.

"The Gospel of the Family offers an ideal in life which must take into account a sense of the times and the real difficulties in permanently maintaining commitments. In this regard, the Church needs to proclaim a message which might give hope and not be burdensome, so that every family may know that the Church never abandons the family" (Pope Francis).

Mutual self-giving in the Sacrament of Marriage is grounded in the grace of Baptism, which establishes the foundational covenant for every person with Christ in the Church. In accepting each other with Christ's grace, the couple promises a total self-giving, faithfulness and openness to new life. The married couple recognizes these elements as constitutive of

marriage. They recognise them as gifts offered to them by God and are expected to take seriously their mutual commitment made in the name of God in the presence of the Church. God consecrates the love of husband and wife and confirms its indissolubility, offering them assistance to live their faithfulness, mutual complementarity and openness to life. Therefore, the Church looks to married couples as the heart of the entire family, which, in turn, looks to Jesus.

**Pastoral Care for the Wounded Families**

While continuing to proclaim and foster Christian marriage, the Synod also encourages pastoral discernment of the situations of many who no longer live the reality of Christian marriage. Married couples with problems in their relationship should be able to count on the assistance and guidance of the Church. Experience shows that with proper assistance and acts of reconciliation, through grace, many troubled marriages find a solution in a satisfying manner.

Since the Sacrament of Matrimony is an indissoluble and exclusively faithful union between a man and a woman who are called to receive one another and welcome life, Christian marriage is a great grace for the human family. The Church has the duty and the mission to proclaim this grace to each person in every circumstance. The Church also ought to accompany those in a civil marriage or those living together, in a gradual discovery of the seeds of the Word, which lie hidden, until the fullness of union in the Sacrament might be achieved.

It must be borne in mind that the choice of civil marriage or, in some cases, simply living together is very often not a result of prejudice or an aversion to sacramental union but instead linked to cultural or contingent situations. To address these pastoral needs, the members of the Christian community too, especially at the local level, need to work together. In this regard, Christian families who bear witness with their lives to the truth of the Gospel have an important role to play.

Pope Francis, like his predecessors, is deeply concerned about the health and happiness of today's families. Some time ago he tweeted: "The family is where we are formed as people. Every family is a brick in the building of society." Another time he tweeted: "The family is the greatest treasure of any country. Let us all work to protect and strengthen this, the cornerstone of society." His intention in calling two meetings of the Synod within the period of one year to discuss the problems facing the Family is clear. He is convinced that families are so important in God's plan for the Church and he wants every member of the Church to understand the importance and the role of the Christian family. The future of every individual and of the world passes through the family.

**NEWS AND EVENTS**

**1.Priest's Retreat**

The annual Priests Retreat was held at Sangamam from $5^{th}$ to $9^{th}$ October. Rev. Fr. I. Sathian OFM Cap. from the Anugraha Capuchin Institute for Counselling and Psychotherapy, Dindigul animated the Retreat days.

**2.Pastoral Council**

The fourth pastoral council had its seventh sitting on $2^{nd}$ October 2015. This time the main topic for discussion was the Year of Mercy. The members of the pastoral council discussed in four groups about the acts of mercy that can be carried out specifically in this year.

**3.Consecration of Mezhacode Church**

God has blessed us again through generous benefactors and now we have our new Church of St. Francis of Assisi at Mezhacode. The new church was blessed by me on $11^{th}$ October 2015. I congratulate and thank Rev. Fr. Augustine Thalodil.

**4.Junior Priests Orientation Programme**

Nineteen of the Junior Priests of our Diocese gathered on $15^{th}$ and $16^{th}$ September 2015 at Sangamam for the Junior Priests Orientation Programme. Rev. Fr. Bosco SDB from Trivandrum

animated the sessions. He dealt with topics like personal care, physical health, emotional health, intellectual health, spiritual health, managing stress and strain, goal setting, and so on.

**5.FCC First Profession and Vestition**

We congratulate Rev. Sr. Asheena Rose Mystica FCC and Rev. Sr. Meju Emmanuel FCC, who made their First Vows on 10th October 2015 and had their Vestition during a well-organized and beautiful Holy Qurbana celebrated at Padanthalumoodu Parish. Both the sisters will work in the San Joe Province Thuckalay.

**6.Altar Blessing at Kudukachivilai**

The new mission at Kudukachivilai keeps growing. On 13th October at 5.15pm the Altar at the Fathima Matha Church, Kudukachivilai was blessed. I thank Rev. Fr. Antony Jose.

**7.Chain Rosary in families**

Families in their Uraviams gathered on 18th October at 6.00pm to honour Our Lady of the Rosary by praying the Rosary. I was glad to get reports from our parishes that all of the Uraviams conducted the Chain Rosary well and there was maximum participation from our faithful.

**8.Rosary Rally**

About 900 of our faithful from various parishes participated in the Rosary Rally held on 25th October. The procession began from Kaisalavilai and ended at Plankalai. It was a very prayerful procession and we could witness people's devotion to our Lady and their love for praying the Rosary. I thank in a special way Mariayin Senai for organizing it.

**9.Special collections during the year**

Every year we take some special collections in order to support our Mother the Church and our Diocese. I have given below the dates and occasions for these special collections. May I remind you that this is not an option for us but the duty and responsibility of every parish/diocese to contribute to the common activities of the Church. Also please instruct the faithful about the tradition

of the Church and the Diocese. The collections to be made are on the following occasions:

1. World Mission Sunday (October 22)
2. Syro-Malabar Mission Week (Following Sunday after the feast of Denha)
3. Good Friday collection (upkeep of the Holy Land)
4. Lenten collection (Hundial, meant for a charitable institutions in the diocese)
5. Diocesan charity fund (taken during Lent on 3rd Sunday of Lent)
6. Sabha Dhinam collection on July 3 or Sunday after July 3 (for the upkeep of Archiepiscopal curia, Kakkanad)
7. Convention collection (a fixed amount for parishes)
8. Vincent de Paul (September 3rd Sunday)
9. Catechism department (after Pentecost Sunday)
10. Natural disaster (when needed)

I request you to take seriously and plan well in advance for these collections.

**FORTHCOMING EVENTS**

**1.CML Rally**

As I have already mentioned in my previous circular, the Cherupushpam Mission League under the leadership of Rev. Fr. Shojo Erupathanchilchira the director is organizing the Annual Rally on Sunday 1 November 2015. The Rally begins from Annikarai at 2.00 pm and ends at Padanthalumoodu at 4.00 pm.

**2.Priests Conference**

Making use of this opportunity of all the fathers gathering on 1st November, I am convening an emergency Priests' Conference on the same day soon after the conclusion of the CML Rally at Padanthalumoodu around 4.30 pm.

**3.19th Diocesan Day Celebration cum Jubilee of Syro-Malabar Extension to South India**

Our Diocese of Thuckalay was founded on 11 November 1996 by the bull *Apud Indorum* issued by St. John Paul II. Our Eparchy itself

was the result of a mission venture constituted sixty years ago as the extension of Syro-Malabar Mission to South India. Today we are happy and proud that this mission has borne fruit and we shall celebrate the Diamond Jubilee of this event on the Diocesan Day to be held on 14th November at Kalluvilai. His Grace Mar Joseph Powathil will grace the occasion and preside over the function.

**4.Diocesan Convention**

Please be informed that our Annual Diocesan Convention will be held 4th, 5th, and 6th of December 2015 at Sacred Heart Church, Padanthalumoodu. We shall plan for these days during our Priests Conference on 1st November.

**5.Inauguration of the new College building**

Our St. Alphonsa College of Arts & Science will have its new building inaugurated on 16th December. His Beatitude George Cardinal Alencherry will preside over the function.

**6.Priestly Ordination of Rev. Deacon Ritto Thoompunkal**

Rev. Deacon Ritto Thoompunkal will be ordained priest on 28th December 2015 in his home parish Fathimapuram, Changanassery.

**7.Thadikarankonam convent blessing**

Sisters of the Franciscan Clarist Congregation had already begun their mission work at Thadikarankonam a few years back. The blessing and inauguration of the new building will be held on 26 November 2015 at 1:30pm. I congratulate and thank Rev. Mother Celia FCC and her team.

**10.Year of mercy Inauguration**

Our Holy Father Pope Francis has proclaimed the Extraordinary Jubilee of Mercy starting on 8th December 2015 (Fiftieth anniversary of the closing of the Second Vatican Ecumenical Council and the Feast of the Immaculate Conception) to 20th November 2016 (Feast of Christ the King). He desires that celebration of “the Holy Year to be for all believers a true moment

of encounter with the mercy of God" and that it is his "wish that the Jubilee be a living experience of the closeness of the Father, whose tenderness is almost tangible, so that the faith of every believer may be strengthened and thus testimony to it be ever more effective."

We in our Diocese along with the Universal Church shall inaugurate this Year of Mercy on 13th December 2015. We will gather at Sacred Heart Church, Padanthalumoodu at 1.30pm. At 9.30am we shall begin this Holy Year with the celebration of the Holy Qurbana leading us into the Year of Mercy. At the beginning of the celebrations there will be the "Opening of the Door of Mercy," as the Psalm 136 will be prayed. This will be followed by a symbolic offertory procession and then Holy Qurbana will be celebrated.

**INFORMATION**

1. Priest conference of November 10, 2015 stands cancelled.

2. The FCC Province of Thuckalay will have their Provincial Election Synaxis from 27th November to 2nd December. I will be addressing their Chapter on 1stDecember. The CMC Vice-Province will have their Provincial Election Synaxis from 14th to 17th November. I will celebrate Holy Qurbana for them on 17thNovember, i.e., on the Election Day. Let us pray that the sisters may have successful and fruitful chapters conducted. At the end of the chapter they elect/re-elect their next provincial.

3. Christmas letters to our faithful: like last year this year too I will be sending the Christmas wishes to our faithful.

4. Two sisters from the Congregation of Holy Family (CHF) sisters, Rev. Sr. Jain Rose and Rev. Sr. Princy Raphael, have begun their new ministry called Radical Living at Vayalinkarai parish from October 1, 2015 onwards. We wish them the best for their ministry.

5. The Diocese Home mission Team has began their ministry in Soosaipuram Forane.

6. A five member team headed by Fr. Jose Muttathupadam will leave for Bombay on 12th November to take part in the National Eucharistic congress.

7. Rev. Mother Mariamma FCC is still in the Chethipuzha hospital and she requires our special remembrance and prayers.

**CONCLUSION**

These days and especially this year we come to encounter several themes presented by Mother the Church and discussed by her. We are walking towards the inauguration of the Year of Mercy even as we are amidst the Year of Consecrated Life, and meanwhile the Church has just completed her Synod on the Family. Soon in India we will have the Eucharistic Congress. It does take time for us to ponder over, meditate, personalize, and act over the themes presented to us. Mother the Church cares for her children by attending to different dimensions of her children's life. It is also a sign that the Church is vibrant and ever alive with the Holy Spirit.

But all these efforts will go to waste if we, e behave as just bystanders with the least involvement. These are gifts of the Spirit bestowed on us in a special way when the world outside lacks clarity of philosophy of life and living. It is for us to take up to read, reflect, share, and put into practice the truths the *Magisterium* is teaching us.

I wish you all a continued Spirit-filled Journey.

Yours in Christ,

**+ George Rajendran SDB**

Bishop of Thuckalay

# பேராயர் மடல்

## 60 ஆண்டுகள் நிறைவில் தென்னகத் திருத்தொண்டுத் தளங்கள்

**மெசியாவில் அன்பான அருட்தந்தையர்களே! துறவறத்தாரே! சகோதர சகோதரிகளே!**

1. சங்ஙனாச்சேரி மறைமாநிலத்தின் திருத்தொண்டுப் பணிகள் அறுபது ஆண்டுகள் கடந்து தொடர்கிறது. தென் எல்லை பம்பை நதி வரை என்று வரையறுக்கப்பட்டிருந்த சீரோ மலபார் சபையின் சங்ஙனாச்சேரி மறைமாநிலத்தின் எல்லை கொல்லம், திருவனந்தபுரம், கோட்டார் போன்ற லத்தீன் மறைமாவட்டப் பகுதிகளையும் உட்படுத்தி கன்னியாகுமரிவரை நீடிக்கப்பட்டது. இவ்விடங்கள் மறைமாநிலத்தின் தென் மறைபரப்புதளங்கள் என்று அறியப்படுகின்றன. கீழைச் சபைகளின் செயலகம் 1955 ஏப்ரல் 25இல் உருவாக்கிய 'முல்தோரும் பிதேலியூம்' என்னும் ஆணை 12ஆம் பத்திநாதர் பாப்பானவரால் அங்கீகரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டதால் இவ்விரிவாக்கம் ஏற்பட்டது. இந்நிகழ்வின் வரலாற்றுப் பின்னணியும் அதன் முக்கியத்துவமும் அறிவது நலமென கருதுவதால் சுருக்கமாக கூற விழைகிறேன்.
2. கி.பி. 52இல் கொடுங்கல்லூரில் வந்து கி.பி.72 இல் மைலாப்பூரில் இரத்த சாட்சியாக இறக்கவும் செய்த ஆண்டவரின் சீடர் தோமையாரின் 20 ஆண்டுகள் மறைபரப்புச் சான்றின் மூலைக்கல்லில் உருவான மார்த்தோமா நஸ்ராணிகள் அதாவது மார்த்தோமா கிறித்தவர்கள் என்று அறியப்படும் பாரதத்தின் முதல் கிறித்தவர்களின் சபை சுரியானி சபை. சீடர்களின் விசுவாசப் பாறையில் நிலைத்து கீழை சுரியானி பரம்பரையில் வளர்ந்து வந்த மார்த்தோமா நஸ்ராணி கத்தோலிக்க சபை 16ஆம் நூற்றாண்டு வரை இந்தியாவின் ஒரே அதிகாரபூர்வமான கிறிஸ்தவ சபையாக இருந்தது. கேரள மண்ணில் வேரூன்றி வளர்ந்த இப்பழமைவாய்ந்த சுரியானி சபையின் தலைவர் பாரதத்தின் ஒட்டுமொத்த 'மெத்றா போலித்தா' என்று அழைக்கப்பட்டார். திருச்சபை

ஆட்சியமைப்பின் பிரதம பொறுப்பு வகித்த குருவானவர் இந்தியா முழுமைக்கும் பெரிய தியாக்கோன் என்று அழைக்கப்பட்டார். இவ்விரு பதவிகளும் மார்த்தோமா நஸ்றாணி சபைக்கு பாரதம் முழுவதும் தலைமை பதவியும் மேய்ப்பு அதிகாரமும் கிடைக்கப் பெற்றிருந்தது என்பதைக் காட்டுகிறது.

3. 16ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த மேற்கத்திய லத்தீன் மறைபரப்பாளர்கள் படிப்படியாக போர்த்துக்கீசிய அரசாட்சியின் துணையுடன் இங்கிருந்த பழமையான மார்த்தோமா நஸ்றாணி சபையின் மேல் ஆதிக்கம் செலுத்தி மெட்ரோ போலித்தா பதவியை இழக்கச் செய்து அண்மையில் உருவான கோவா லத்தீன் பேராயத்தின் ஒரு மறைமாவட்டமாக நஸ்றாணி சபையை கீழ்நிலைப்படுத்தினர். இவ்வாறாக 17ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தோடு இச்சபையின் அகில இந்திய தலைமைப் பதவியையும் மேய்ப்பு சுதந்திரத்தையும் இழக்கச் செய்தனர்.

4. தங்களுடைய சுறியானி ஆராதனை முறையின் மறு உருவாக்கலுக்கும் பாதுகாவலுக்குமாக பொறுமையுடன் தொடர்ச்சியாக நடத்திய முயற்சிகள் 19-ம் நூற்றாண்டின் ஆரம்ப காலகட்டத்தில் பலன் காணத் தொடங்கியது. இதனிடையே லத்தீன் மறை மாநிலத்தின் சங்கமாக வாழ்ந்திருந்த கத்தோலிக்கர்களாகிய மார்த்தோமா நஸ்றாணி கிறித்தவர்களை வராப்புழையின் அதிகாரத்திலிருந்து விடுதல் அளித்து கோட்டயம், திருச்சூர் எனும் இரு வட்டாரங்களாக மாற்றினார். 1887-ல், "குவாத் ஜாம் பிரிடம்" என்னும் ஆணை வழி 13-ம் சிங்கராயர் பாப்பானவர் இவ்வட்டாரங்களை நிறுவினார். லத்தீன் ஆயர்கள் இவ்வட்டாரங்களின் அப்போஸ்தலர்களாக நியமிக்கப் பட்டிருந்தாலும் சுரியானி ஆராதனை முறைமையினர் ஆராதனை முறையில் லத்தீன் முறைமையிலிருந்து வேறுபடுத்தி தனி வட்டாரங்களாக்கப்பட்டன. கத்தோலிக்கர்களான மார்த்தோமா நஸ்றாணிகளின் திருச்சபையை சீரோ மலபார் என்று அதிகாரபூர்வமாக பெயர் சூட்டப்பட்ட முக்கிய ஆவணமாக

13-ம் பத்திநாதர் பாப்பானவரின் குவாத் ஜாம் பிரிடம் என்னும் ஆணை காணப்படுகிறது. இவ்வாறு சீரோ மலபார் சபையும் சீரோமலபார் ஆராதனையும் நிலைப்படுத்தப்பட்டது. மலையாற்றூர் முதல் கொச்சி வரை ஆலுவாபுழை எல்லையாக கணக்கிட்டு திருச்சூர், கோட்டயம் வட்டாரங்கள் உருவாக்கப்பட்டன.

6. இரு சுரியானி வட்டாரங்கள் உருவாக்கப்பட்டதெனினும் சொந்த ஆராதனை முறையில் உள்ள ஆயர்களை பெறுவதற்காக முயற்சிகள் தொடர்ந்தன; 1896-ல் அதுவும் பலனடைந்தது. "குவே றெபி சக்றே" என்று கடிதம் வழியாக பாப்பானவர் இரு வட்டாரங்களை திரிச்சூர், சங்ஙனாச்சேரி, எர்ணாகுளம் என்று மூன்றாக சீரமைப்புச் செய்து சுறியானிகளும் தன்னாட்டவருமான ஆயர்களை பாப்பானவரின் நேரடி அதிகாரத்தில் வட்டார அப்போஸ்தலர்களாக நியமனம் செய்தார். இவ்வாறு 296 ஆண்டுகள் லத்தீன் ஆட்சியிலிருந்து சீரோ மலபார்த் திருச்சபை விடுதலைப் பெற்றது. கிழக்கத்திய சுரியானித் திருச்சபையின் மரபுகளிலும் தனித்தன்மையிலும் உள்ள சீரோமலபார் சபையின் நிலைப்படுத்தலிலும் வளர்ச்சிக்குமாக நஸ்றாணி கிறித்தவர்களின் விருப்புகளும் வேண்டுதல்களும் அங்கீகரித்து மற்று எல்லா எதிர்ப்புகளையும் தடைகளையும் எதிர்கொண்டு பாப்பானவரின் ஆட்சி பீடம் இம்முடிவை எடுத்தது. 1923-ல் சீரோ மலபார் ஆட்சி அமைப்பும் 1992-ல் சீரோ மலபார் சபையை ஒரு தன்னாட்சி கொண்ட முதன்மை பேராய ஆட்சியமைப்பையும் கொண்ட சபையாக உயர்த்தப்பட்டு வளர்ச்சிக்கும் முழுமைக்கும் வழிகோலப்பட்டுள்ளது.

7. 2-ம் வத்திக்கான் திருச்சங்கம் கூறுவதுபோல் ஆராதனை, இறையியல், ஆன்மீகம், ஒழுங்குமுறை போன்றவற்றின் தனித்தன்மையான மரபுகளும் சிறப்பம்சங்களும் ஒரு தனித் திருச்சபையை உருவாக்குகின்றது. மூன்று நூற்றாண்டுகள் மேற்கத்திய லத்தீன் அதிகாரத்தின் கீழ் வாழ்ந்த சீரோமலபார் சபைக்கு கிழக்கத்திய தனித்தன்மையில் வளர்ந்து பரந்திட இயலாமல், ஆராதனை, இறையியல், ஆன்மீகம் போன்ற

நிலைகளிலும் தளர்ச்சியும் உருவானது. கீழே திருச்சபைக்கு மாறுபட்ட நிலைப்பாடு கொண்டிருந்த ஆட்சி அமைப்பின் லத்தீன்மயமாக்கல் வழியாக விசுவாசிகளிடையே சொந்த சபையைக் குறித்துள்ள உண்மையான மரபுகளை குறித்த அறியாமை வளரவும் பலரிலும் ஒரு கிழக்கத்திய எதிர் மனநிலைகள் உருவாக ஏதுவாயின. இழந்த அதிகார பூர்வமான திருச்சபை மரபுகள் மீண்டெடுத்து அதன் கிழக்கத்திய தனித்தன்மை நிலைநாட்ட 2-ஆம் வத்திக்கான் சங்கத்தினுடையவும் தூய பீடத்தின் கருத்துக்களும் அவற்றின் முழுமையில் செயல்படுத்திட சீரோ மலபார் சபைக்கு முடியாமல் போக இதுவும் காரணமாகும்.

8. 1896-ல் சீரோ மலபார்த் திருச்சபைக்கு சுறியானி றீத்துனுடையவும் சொந்த மண்ணினுடையவும் ஆயர்கள் கிடைக்கப் பெற்றாலும் அதனை தொடர்ந்து பெரிய இழப்பும் உருவாகியது. 1610-ல் இந்திய லத்தீன் ஆட்சியின் கீழ் கோவா, கொச்சி, மைலாப்பூர், கொடுங்கல்லூர் என்னும் நான்கு மறை மாவட்டங்களாக பிரிப்பது வரை மார்த்தோமா நஸ்றாணி சபையின் தலைவராக இருந்த பேராயருக்கு இந்தியா முழுவதும் தன்னுடைய இறைமக்களை மேய்க்கும் அதிகாரம் இருந்தது. இப்பிரிவின் தாக்கத்தால் மார்த்தோமா கிறித்தவர்களின் கொடுங்கல்லூரின் எல்லை மலபாரின் கேரளம் சின்ன ஒரு பாகமாக கட்டுப்படுத்தப்பட்டது. தமிழகத்தினுடையவும் கர்நாடகத்தினுடையவும் ஒரு சிறு எல்லைகள் அதற்குட்படுத்தப்பட்டிருந்தது. 1887-ல் இரு சுறியானி வட்டாரங்கள் உருவாக்கப்பட்டன. அவை ஆலுவாபுழையின் தெற்கும் வடக்குமாகும். அதற்கு வெளியேயுள்ள மற்ற எல்லைகள் வரையறுக்கப்படவில்லை. ஆனால் 1896-ல் மூன்று சுரியானி வட்டாரங்களாக நிர்வகிக்கப்பட்ட பொழுது அவற்றுக்கு தெளிவான எல்லைகள் வரையறுக்கப்பட்டன. இதனால் சீரோமலபார் சபை கேரளத்தின் ஒரு சிறு பாகமாக ஒதுக்கப்பட்டது. அதாவது பம்பா நதிக்கும் 1/200 பாகம் மட்டுமே. இப்பிரதேசத்திற்கு வெளியே வளர சீரோமலபார் சபைக்கு முடியவில்லை. அங்கு வசிக்கின்ற

சீரோமலபார் விசுவாசிகள் லத்தீன் மறைமாவட்டங்களின் கீழ் லத்தீன் ஆராதனையைக் கடைபிடித்து வாழ கட்டாயப்படுத்தப்பட்டார்கள். அவ்விடங்களில் சுதந்திரமாக நற்செய்திப்பணி புரிய சீரோமலபார் சபைக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

9. மேய்ப்புபணி அதிகாரம் விரிவு படுத்தப்படல்

வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் நிலைநிறுத்தப்பட்டிருந்த சீரோமலபார் திருச்சபை சிறிதளவு விரிவாக்கப்பட்டு கிழக்கு திருச்சபை செயலகம் 1955 ஏப்ரல் 25-ம் தியதி நான்கு ஆணைகள் உருவாக்கி 12-ம் பத்திநாதர் பாப்பானவரின் அனுமதியுடன் அவை வெளியிடப்பட்டன.

அவையாவன

(i).'முல்தோரும் பிதேலியும்' என்னும் ஆணை வழி சங்னனாச்சேரி மறைமாவட்டத்தின் எல்லை கொல்லம், திருவனந்தபுரம், கோட்டார் மறைமாவட்ட பிரதேசங்களை உட்படுத்தி கன்னியாகுமரி வரை விரிவுபடுத்தப்பட்டது.

(ii).'சேபே பிதலஸ்' என்னும் ஆணை வழி திருச்சூர் மறைமாவட்டத்தின் எல்லை கோயம்பத்தூர் லத்தீன் மறை மாவட்ட எல்லையை உட்படுத்தி விரிவாக்கப்பட்டது.

(iii).'பிரோ பிதேலியூஸ்' என்னும் ஆணை வழி தலச்சேரி மறைமாவட்ட எல்லை மைசூர் மங்களூர் என்னும் லத்தீன் மறைமாவட்டங்களின் பிரதேசங்களையும் உட்படுத்தி விரிவாக்கப்பட்டது.

(iv).மற்றொரு ஆணை சீரோ மலபார் சபைக்கு மேய்ப்புப் பணி அதிகாரம் கொண்ட இடங்களில் வசிக்கும் எல்லா சுரியானிக் கத்தோலிக்கர்களின் மேல் கோட்டயம் ஆயருக்கு தனிப்பட்ட மேய்ப்புப் பணி அதிகாரம் வழங்கப்பட்டது.


இப்புதிய அமைப்பு வழி நிலம் பெயர்ந்த மிகப் பெரு அளவினரான சீரோமலபார் விசுவாசிகள் அவர்களின் சொந்த ஆராதனை முறையில் தங்கள் ஆராதனை நடத்திட அனுமதி பெற்றனர். இவ்வதிகாரம் கிடைக்க பெற்று 60 ஆண்டுகள் இப்போது முழுமையடைந்திருக்கிறது.

10. பல்வேறு தனிச்சபைகளின் கூட்டியக்கமே கத்தோலிக்க சபை என்றும் எல்லா சபைகட்கும் சரிசமமான பதவிகளே உள்ளது என்றும் உலகத்தில் எவ்விடத்திலிருந்தாலும் சொந்த ஆராதனை முறையை கடைபிடிக்க வேண்டும் என்றும் உலகம் முழுவதிலும் நற்செய்தி அறிவிக்க எல்லா சபைகட்கும் உரிமையும் கடமையும் உண்டென்றும் கற்பித்த 2-ம் வத்திக்கான் திருச்சங்கம் முடிந்து அரை நூற்றாண்டுகளான பின்பும் சீரோ மலபார் சபைக்கு அதை முழுமையாக செயல்படுத்திட அதிகாரவும் சுதந்திரவும் எட்டாக்கனி என்பது ஒரு துயர உண்மையாகும். ஒவ்வொரு தனிச்சபையும் அதன் தனிமையிலும் தனித்துவத்திலும் வளரும்போதுதான் திருச்சபை முழுவதும் வளர்ச்சியடைகிறது. தடைகளைத் தகர்த்து நமது திருச்சபை தன் தனிமையிலும் அழகிலும் வளர்ந்து முழுமையடைந்திட அனைவரும் ஒன்று சேர்ந்து முயற்சிப்போம். அதற்கு சபையை அதிகமாக அறிந்திடவும் அன்பு செய்யவும் நம்மால் முடிந்திட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக தூய ஆவியால் நாம் நடத்தப்பட வேண்டும். நம் ஆண்டவர் ஈசோவின் கிருபை உங்களனைவரோடும் இருப்பதாக.

அன்புடன்,
பேராயர் ஜோசப் பெருந்தோட்டம்,
சங்ஙனாசேரி மறைமாநிலம்.

---

## Pope Francis
# TWEETS



**Pope Francis** @Pontifex Oct 27
Parents, can you “waste time” with your children? It is one of the most important things that you can do each day..



**Pope Francis** @Pontifex Oct 10
Work is important, but so too is rest. Shouldn’t we learn to respect times of rest, especially Sundays?

# ஆயர் திருமுகம்

Pastoral letter No/GR/ 25/ 2015

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருள்தந்தையர்களே, அருள்சகோதரிகளே, அன்பு சகோதர சகோதரிகளே,

நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக.

முதல், உலக நற்கருணை மாநாடு மும்பையில் 1964-ம் ஆண்டு நடைபெற்றது. அதில் பாப்பிறை 6-ம் பவுல் பங்கேற்று, நமது நாட்டிற்கு வருகை தந்த முதல் திருத்தந்தை எனும் பெருமை பெற்றார். இதனை நினைவுகூறும் 50-ம் ஆண்டு பொன்விழா கொண்டாட்டம் மும்பையில் மீண்டும் நடைபெறுகிறது. எனவே, இவ்வாண்டு (2015) நவம்பர் 12 முதல் 15 முடிய தேசிய நற்கருணை மாநாடு நடத்த அகில இந்திய ஆயர்கள் பேரவை தீர்மானித்துள்ளது.

இரண்டாம் வத்திக்கான் பேரவை நமக்குத் தந்த, நற்கருணையே கிறிஸ்துவ வாழ்வின் மையமும் ஆதாரமும் - எனும் இறையியல் சிந்தனையில் கொண்டாட தீர்மானித்துள்ளோம்.

இவ்வேளையில், நற்கருணையின் மறைபொருளை அறிந்துகொள்ளவும், ஆழமான பற்றுறுதியுடன் நற்கருணையை உட்கொள்ளவும், நற்கருணையை நம் வாழ்வாக்கவும், அருட்கொடைகளின் அருட்கொடையான நற்கருணையின் மேல் ஆழ்ந்த பேரன்பும், பக்தியும் கொண்டு விளங்கவும் இச்சுற்றுமடல் மூலமாக உங்களோடு உரையாடுகின்றேன்.

**நற்கருணையின் மறைபொருள்**

தினமும் நடைபெறும் திருப்பலியின் ஆச்சரியமான, அதிசயமான நற்கருணையின் மறைபொருளைத் தியானிப்பதின் மூலம், அதன் மேலுள்ள நமது பேரன்பை அதிகரிக்கமுடியும். இந்த மறைபொருள் கட்புலனாகாதது; மாறாக, நம்பிக்கையினால் அறிந்து கொள்ளமுடியும். நற்கருணையில் உள்ள கிறிஸ்துவின் உடனிருப்பும், அதன் ஆன்மீக உணவும் திருச்சபையை காலகாலமாக நடத்திச் செல்லுகின்றது. நற்கருணை ஒரு மாபெரும் கொடை; கிறிஸ்துவே அக்கொடை; அதுவே மனிதமான கொடை; அது மீட்பின் கொடை.

நற்கருணையில், கிறிஸ்துவின் இறப்பையும் உயிர்ப்பையும் திருச்சபையானது கொண்டாடுகின்றது. இக்கொண்டாட்டத்தில், மீட்பின் முக்கிய நிகழ்வான பாஸ்கா மறைபொருள் உண்மையிலே நிறைவேற்றப்பட்டு, நமது மீட்பு செயல்படுத்தப்படுகின்றது. மனித குல மீட்பிற்காக, கிறிஸ்து விட்டுச் சென்ற இந்த நற்கருணையைப் பகிர்வதின் மூலம், நாமும் அதில் இணைகின்றோம். அதன் கனிகளை சுவைக்கின்றோம். நமது முன்னோர்கள் முதல் இன்றுவரை, இந்த நம்பிக்கையிலே நாம் வாழ்கின்றோம். இந்த நற்கருணையின் மூலம் முடிவில்லாத பேரன்பையும், அளவில்லாத அன்பையும் கிறிஸ்து நமக்கு காட்டுகின்றார். இதைவிட கிறிஸ்து நமக்கு வேறென்ன செய்ய முடியும்?

தினமும் நடைபெறும் நற்கருணைக் கொண்டாட்டத்தில் இயேசுவின் கல்வாரிப்பலி நினைவு கூரப்படுகின்றது. அதில் கிறிஸ்துவின் மீட்பின் அடையாளமாக சிலுவை அடங்கியுள்ளது. கிறிஸ்துவின் தியாகப்பலியில் திருச்சபையும் தன்னையும் இணைத்துக்கொள்ளும்போது, பலிப்பொருளாக திருச்சபையும் கிறிஸ்துவோடு இணைந்து தந்தை கடவுளுக்கு ஒப்புக் கொடுக்கப்படுகின்றது.

கிறிஸ்துவின் உடலையும் இரத்தத்தையும் நாம் உணவாக உட்கொள்ளும் நிகழ்வில் பங்கேற்கும்போது, கிறிஸ்துவின் தியாகத்தில் நாம் மீட்கப்படுவதை நம்மால் உணர்ந்துகொள்ள முடியும். இதை உட்கொள்ளும்போது நாம் கிறிஸ்துவுக்குள் ஒன்றாகின்றோம். "பலருடைய பாவமன்னிப்புக்காக சிந்தப்படும் என் இரத்தம்"(மத். 26:28) என்ற வாக்கின்படி நாம் கழுவப்பட்டு அவருக்குள் ஒன்றாகின்றோம். "வாழும் தந்தை என்னை அனுப்பினார். நானும் வாழ்கிறேன். அதுபோல், என்னை உண்போரும் என்னால் வாழ்வர்" (யோவா. 6:57) எனும் வாக்கின் மூலம், தமத்திருத்துவத்தை நற்கருணையை உண்பதின் மூலம் உணர்ந்து கொள்ள முடியும். இதை கிறிஸ்து பலமுறை தன் சீடர்களுக்கு வலியுறுத்திக் கூறியுள்ளார். (யோவா. 6 : 53,55).

மதிப்பீடுகளில் இருந்து விலகி, தனி மனிதத் தீவுகளாக வாழ்ந்துவரும் இக்காலச் சூழலில், நற்கருணையானது உலகில் சுதந்திரத்தோடு வாழவும், தூயதாகவும் சுயநலமின்றியும் கிறிஸ்து

அன்பு செய்து வாழ்ந்தது போல் நாமும் பிறரை அன்பு செய்து வாழவும் தேவையான ஆற்றலை வழங்குகின்றது. நற்கருணை உட்கொள்ளும்போது நமக்குள் மதிப்பீடு உருமாற்றம் நடைபெறுவதாக பாப்பிறை 16-ம் பெனடிக்ட் கூறியுள்ளார். சக்கேயு (லூக் 19 : 1-10) உருமாற்றம் பெற்றதுபோல், நாமும் பாவத்திலிருந்து விடுதலையாகி மதிப்பீட்டில் உருமாற்றம் பெறுகின்றோம். இவ்வாறு கிறிஸ்துவை நாம் வாழ்வாக்குகின்றோம். இதுவே நற்கருணையின் மூலம் கிறிஸ்துவோடு நாம் கொண்டுள்ள உறவு ஆகும்.

**சீரோ மலபார் மரபில் நற்கருணை**

நற்கருணைக் கொண்டாட்டத்தை, நமது மரபில் நாம் குர்பான என அழைக்கின்றோம். இதில் இரண்டு காரியங்கள் அடங்கியுள்ளன. ஒன்று - தூய மறைபொருளைக் கொண்டாடுவது; மற்றொன்று - இயேசுவின் உடலும் இரத்தமும் அடங்கியுள்ளது. இதையே இயேசு மார் தோமாவுக்கு வெளிப்படுத்தியுள்ளார். (யோவா 6:54; லூக் 11 : 19-20) குர்பான என்பது கிறிஸ்துவின் தனிப்பட்ட செயல் அல்ல; மாறாக, முழுத் திருச்சபைக்கும் கிறிஸ்து அளித்த கொடை. குர்பானவை கிறிஸ்து, தந்தைக் கடவுளுக்கு கையளிப்பவராக மட்டுமல்ல, அதைப் பெற்றுக் கொள்பவராகவும் இருக்கின்றார். தூய ஆவியாகிய கடவுள், விண்ணிலிருந்து இறங்கி அதை நிறைவு செய்பவராகவும் விளங்குவதை நாம் உணர்ந்துள்ளோம். எனவே குருக்களும், ஆசிரியர்களும் மறைக்கல்வியில் குர்பான -வின் மறைபொருளை கற்பித்தல் வேண்டும். கிறிஸ்துவ ஆன்மீகத்தில் வளப்படவும், தீமைகளை எதிர்த்துப் போராடவும், தினமும் நற்கருணைக் கொண்டாட்டத்திலும், நற்கருணை ஆராதனைகளிலும் பங்கெடுக்க வலியுறுத்த வேண்டும்.

**நற்கருணைக் கொண்டாட்டத்தில் பங்கேற்பு**

திருப்பலி பற்றி 2-ம் வத்திக்கான் சபை, ‘முழு உள்ளத்தோடு செயல்பட்டு பங்கேற்க வேண்டும்‘ என வலியுறுத்துகின்றது. இதில் ’செயல்படுதல்’ எனும் சொல் புற பங்கேற்பையும், ‘உள்ளத் தோடு‘ எனும் சொல் உள் மன பங்கேற்பையும் சுட்டி நிற்கின்றன. ஆனால் ‘முழு‘ என்பது இவ்விரண்டும் இணைந்த பங்கேற்பை குறிக்கின்றது. அவ்வாறு பங்கேற்கும் போது, மக்கள்

1. மறைநூல்களாலும், மறையுரையாலும் வழிநடத்தப் படுகின்றார்கள்.
2. நற்கருணை உட்கொள்ளுதல் மூலம் வளமடைகின்றார்கள்.
3. கடவுளுக்கு நன்றி செலுத்துகின்றார்கள்.
4. கிறிஸ்துவோடு இணைந்து தங்களையும் தந்தைக்கு பலியாகச் செலுத்துகின்றார்கள்.
5. தந்தைக் கடவுளோடும், பிற சகோதரர் சகோதரிகளோடும் ஒன்றாகின்றார்கள்.

நற்கருணைக் கொண்டாட்டத்தின் மூலம் இயேசு, மக்களுக்கு கிடைக்க விரும்பிய பலன்களை பெற்றுத்தரும் முக்கிய காரணியாக குருக்கள் செயல்படுமாறு வேண்டுகிறேன். குருக்கள், கிறிஸ்துவின் மந்தையை மேய்ப்பவர்களாக மட்டுமன்றி, தாங்களே முன்மாதிரியாகத் திகழவேண்டும் (sc 19) குருக்களின் தெய்வீகத்தன்மையும், தூய்மையும், மறைபொருட்களின் வெளிப்பாடும், நற்கருணைக் கொண்டாட்டமும் ஆன்மாக்களை ஊடுருவிச் செல்லக்கூடியதாய் விளங்கவேண்டும். (sc 14)

திருப்பலி கடவுளிடம் ஆன்மாக்களை (மக்களை) இருவழிகளில் சேர்க்கின்றது. 1. திருப்பலியின் ஆற்றல் 2. திருப்பலியில் பிறரின் தெய்வீகத்தன்மை. திருப்பலியின் வழியாக நாம் வளரும் இருவழிகள் : 1. கடவுளின் உடனிருப்பையும் செயல்பாட்டையும் உணர்ந்து அடைதல் 2. அதை அடைந்தவர்களோடு நம்மையும் இணைத்துக் கொள்ளுதல். இந்த காரியங்களை நம்பிக்கை கொண்டோர் பெற்றுக்கொள்ள நமது திருச்சபை முயல வேண்டும்.

**நற்கருணை ஆராதனையில் பங்கேற்பு**

நற்கருணையின் மற்றொரு அம்சம் நற்கருணை ஆராதனை. நமது மறைமாவட்டத்தில் நற்கருணை ஆசீர், நற்கருணை நேரம், விழிப்பு ஆராதனை, நற்கருணை ஆராதனை போன்றவற்றை ஒழுங்காகவும், அடிக்கடியும் கொண்டாட நான் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன். குருக்கள் அதை முன்னின்று நடத்துவது மக்களின் நம்பிக்கையைத் தூண்டுவதாகவும் இறை உரையாடலைத் திறவுகோலாகவும் அமையும். நமது மறைமாவட்ட பள்ளிகள், விடுதிகள் மற்றும் மையங்களில் நற்கருணை ஆராதனை ஏற்பாடு

செய்வது நல்லது. இது கிறிஸ்துவைப் பற்றியும், அவரது அன்பைப் பற்றியும் இளையோர் மற்றும் சிறுவர் அறிந்துகொள்ள உதவும், கதிரவனின் ஒளிக்கீற்று வளர்ச்சிக்கு உதவுவதுபோல், இந்த சிறு ஆராதனை ஞாயிறு பலியில் பங்கேற்க உதவி புரியும்.

**நற்கருணையின் தூதுரையில் பங்கேற்பு**


எம்மாவுஸ் பயணம் - எனும் நிகழ்ச்சி, நமது தூதுரைப் பயணத்திற்கு, நற்கருணை ஓர் ஆன்மீக ஆற்றலின் ஆதாரம் என்பதை சுட்டிக்காட்டுகின்றது. நற்கருணைக் கொண்டாட்டத்தில் நாம் பங்கேற்கும்போது, நாம் எம்மாவுஸ் பயணம் மேற்கொண்ட இரு சீடர்கள் போலாகின்றோம். இறைவார்த்தைகளைத் திருப்பலியில் கேட்கும்போது, நம் உள்ளம் அன்பினால் பற்றி எரிந்து, கடவுள் நமக்கு செய்த நன்மைகளுக்காய் நன்றி கூறுகின்றோம். நற்கருணையை உட்கொள்ளும்போது, நமது உள்ளத்தில் குடியேறிய இயேசுவின் உடனிருப்பில் பெருமை கொள்கின்றோம். எங்களோடு தங்கும், இயேசுவே - என சீடர்கள்போல் அக்களிக்கின்றோம். திருப்பலி நிறைவுற்று வெளியே செல்லுகையில், சீடர்களைப் போல், நற்செய்தியைத் தூதுரைக்க எழுந்து செல்லுகின்றோம்.

அன்னை மரியாளின் பரிந்துரையால், நற்கருணையின் மேலுள்ள அன்பும், பற்றுறுதியில் வளரவும் அக்கொடையின் மறைபொருளை மேலும் அறிந்து கொள்ளவும், எல்லா அருட்கொடைகளுக்கும் அருட்கொடையான நற்கருணையின் நம்பிக்கையில் வாழவும், வளரவும் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிக்கின்றேன்.


**ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன்** SDB
தக்கலை மறைமாவட்டம்

---

**Pope Francis**
# TWEETS



**Pope Francis** @Pontifex Oct 24
Economic development needs to have a human face, so that no one will be excluded.



**Pope Francis** @Pontifex Oct 16
Dear young friends, do not be afraid to give your all. Christ will never disappoint you.

## தக்கலை மறைமாவட்டஅருட்பணிப்பேரவை

தக்கலை மறைமாவட்ட 4–ஆம் அருட்பணிப்பேரவையின் 7-ஆம் அமர்வு, அருட்பணிப்பேரவையின் தலைவரும் நம் ஆயருமாகிய மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் 02.10.2015 வெள்ளிக்கிழமை, தக்கலை சங்கமம், மார் மாத்யூ காவுக்காட் அரங்கில் முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 3.30 வரை நடைபெற்றது.

உறுப்பினர் திரு.சுனில்ராஜ் உதவியோடு பேரருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் தலைமையில் இறைவேண்டல் நடைபெற்றது. வருகை புரிந்த அனைவரையும் பேரவைச்செயலர் அருட்தந்தை மிஜோ புத்தன் புரைக்கல் அவர்கள் வரவேற்றார். பேரவை இணைச்செயலர் திரு.ஜாண் குமரித்தோழனால் பேரவை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தொடர்ந்தும் பிற்பகலிலுமாக வழிபாட்டுக்குழு, மறைக்கல்விக்குழு, இல்வாழ்வுக்குழு, இளைஞர் நல்வாழ்வுக்குழு, கல்விக்குழு, திருதொண்டுக்குழு, சமூகசேவைக்குழு ஆகிய பேரவைக் குழுக்கள் தத்தம் அறிக்கைகளை சமர்ப்பித்தன. சமூகத்தொடர்புக்குழு தன் அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை. புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி பற்றிய செய்திகளையும் அங்கு நடைபெறும் கல்விச் செயல்பாடுகளையும் கல்லூரி தாளாளர் பேரருட்திரு. ஆன்றணி ஜோஸ் அவர்கள் விளக்கினார்கள். பின்னர் சிறிது நேரம் மறைக்கல்விச் செயல்பாடுகள் பற்றி விவாதிக்கப்பட்டது. தேநீர் இடைவேளைக்குப் பின்னர் பேரருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் இரக்கத்தின் ஆண்டு பற்றிய செய்தியை விளக்கமாக எடுத்துரைத்தார்கள். அதற்குப்பின்னர் பேரவை உறுப்பினர்கள் நான்கு குழுக்களாக பிரிந்து,

1. இரக்கத்தின் ஆண்டில் என்னென்ன இரக்கச்செயல்கள் செய்யலாம்?
2. இறைவனின் இரக்கச்செய்தியை எவ்வாறு பெறலாம்? அதை எப்படி பகிர்ந்துகொள்ளலாம்?
3. அறப்பணி நிதி ஒன்றை எவ்வாறு உருவாக்கி செயல்படுத்தலாம்?
4. சபையிலும் சமூகத்திலும் களையப்பட வேண்டிய இரக்கத்துக்கெதிரான செயல்பாடுகள் யாவை?

என்ற தலைப்புகளில் குழுவிவாதம் நடத்தினர்.

உணவு இடைவேளைக்குப் பின்னர் ஆயர் அவர்கள் உரையாற்றினார். ஆயர் தம் உரையில்,

1. நம் மறைமாவட்டம் வளர கல்வியில் நாம் வளர வேண்டும்.
2. கல்வி உதவித்திட்டத்துக்கு அனைவரும் உதவ வேண்டும்.
3. நாம் அனைவரும் திருத்தூதுப் பணியில் ஈடுபடவேண்டும்.
4. புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் வளர்ச்சிக்கு அனைவரும் பாடுபட வேண்டும்.
5. இறைவனின் இரக்கத்தை சுவைத்துப்பார்க்கவே இரக்கத்தின் ஆண்டு போன்ற கருத்துக்களை வலிவுறுத்தினார்கள். பின்னர் குழுவிவாத அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

**குழு அறிக்கைகளின் முக்கிய உட்கருத்துகள்:**

1. மன்னிப்பு, அரவணைப்பு, சந்திப்பு, பக்த இயக்கங்களை ஊக்குவித்தல், ஏழைகளுக்கு உதவுதல், விட்டுக்கொடுத்தல், அறிவுப்பரிமாற்றம் போன்ற இரக்கச்செயல்களில் இவ்வாண்டில் ஈடுபடலாம்.
2. நற்கருணை ஆராதனை, திருப்பலி, இறைவார்த்தைகள், ஒப்புரவு, தியானம், கருத்தரங்குகள், செபமாலை, குடும்பசெபங்கள் மூலம் இரக்கச்செய்தியைப் பெற்று கருத்துரைகள், கலைநிகழ்ச்சிகள், தியான உரைகள், உரையாடல்கள், செபங்கள், அன்றாடப் பணிகள் மூலம் இரக்கச்செய்தியைப் பரிமாறிக்கொள்ளலாம்.
3. காணிக்கைப் பவனி, நன்கொடை, குலுக்கல் பரிசுத்திட்டம், இவ்வருட கிறிஸ்துப்பிறப்பு பஜனை வசூல், நம் சேமிப்பில் குறிப்பிட்ட பங்கை ஒதுக்குதல், ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து அத்தொகையை சேமித்தல் போன்ற செயல்பாடுகள் மூலம் அறப்பணி நிதி ஒன்றை உருவாக்கி ஏழைகளின் கல்வி, மருத்துவம், இருப்பிடம் போன்றவற்றிற்காக பயன்படுத்துதல்.
4. மனிதப் புறக்கணிப்பு, ஆடம்பரம், பிறரை அங்கீகரிக்க மறுத்தல், ஊழல், போதை, அடக்குமுறை, ஆணவம், சுரண்டல் போன்ற சமூக விரோதச் செயல்களைக் களையப் பாடுபடுதல்.

உறுப்பினர்கள் எவரும் கேள்விகள் சமர்ப்பிக்காததால் கேள்வி நேரம் ரத்து செய்யப்பட்டது.

பின்னர் பேரவைச் செயலர் அருட்திரு. மிஜோ புத்தன் புரைக்கல் அவர்கள் இரக்கத்தின் ஆண்டு பற்றிய ஆயர் மன்ற தீர்மானங்களை கூறினார்கள். அதைத்தொடர்ந்து, தக்கலை இளைஞர் இயக்க இளைஞர்கள் அருட்திரு. பெலிக்ஸ் அவர்கள் வழிகாட்டுதலில் ஆயர் முன்னிலையில் போதைக்கெதிராக உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள். ஆயரின் முடிவுரை, அறிவிப்புகளோடு திரு. அகஸ்டின் நன்றி கூற இறுதியாசியோடு அவை பிற்பகல் 3.30 மணிக்கு முடிவுற்றது.

அருட்திரு. **மிஜோ புத்தன் புரைக்கல்**,
பேரவைச் செயலர்.

---

***சில நிகழ்வுகள்***

**1. வருகின்ற நவம்பர் 14ஆம் தேதியன்று, பத்தொன்பதாவது மறைமாவட்ட விழா சிறப்பிக்கப்படும். இவ்வாண்டு சீரோமலபார் திருத்தொண்டுப்பணி தென்னகத்திற்கு விரிவாக்கப்பட்டதின் 60 ஆண்டுகளின் நிறைவாகும். கடவுளின் இந்த ஆசீரை மறைமாவட்ட விழா அன்று நினைவு கூர்ந்து கொண்டாட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.**

**2. தொடர் செபமாலை : அக்டோபர் மாதத்தில் செபமாலை மாதாவை சிறப்பிக்கின்றோம். கடந்த ஆண்டைப் போன்று இவ்வாண்டும் தொடர்செபமாலையை உறவியங்கள் வாரியாக அக்டோபர் 18 அன்று மாலை 6 முதல் 7 மணி வரை செபிப்போம். அனைவரும் கலந்து கொண்டு அன்னையின் பரிந்துரையை நாடுவோம்.**

**3. வருகின்ற டிசம்பர் 5,6,7 தேதிகளில் மறைமாவட்ட நற்செய்தி பெருவிழா படந்தாலுமூட்டில் நடைபெறும். இதில் அனைவரும் கலந்துகொண்டு இறையாசீர் பெற அழைக்கின்றேன். இவ்வாண்டு இந்த நற்செய்தி பெருவிழாவின் தியானத்தை டிவைன் தியான மையத்தினர் நடத்தி இறையாசீரை பெற்றுத்தர வருகின்றனர்.**

# இறைஇரக்கத்தின் சிறப்பு யூபி□ ஆண்டு

(டிசம்பர் 8, 2015 முதல் 20 நவம்பர் 2016 வரை)

## இறைஇரக்கத்தின் ஆண்டு தொடக்க விழா

இடம் : திரு இருதய மறைவட்ட ஆலயம், படந்தாலுமூடு

நாள் : 13 டிசம்பர் 2015 காலை 9.30 மணி

தலைமை : மேதகு ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB

**நிகழ்வுகள்**

1. அறிமுகம்
2. திருப்பவனி
3. திருப்பாடல் 136 – ஐ செபித்து, இரக்கத்தின் கதவை திறத்தல்
4. அடையாள காணிக்கைப் பவனி
5. திருப்ப–
6. நன்றியுரை
7. தேநீர்

**மறைமாவட்ட அளவில் இரக்கத்தின் ஆண்டு செயல்பாடுகள்**

1. மறைமாவட்ட இறைவார்த்தைக் கொண்டாட்டம் இரக்கத்தை மையக் கருத்தாகக் கொண்டு நடத்துதல்
2. ஆண் மனநோயாளிகளுக்கான மறுவாழ்வு மையம் அமைத்தல்.
3. திருச்சடங்குகளுக்கான தயாரிப்புகளை செய்யும் ஆலயப் பணியாளர்களுக்கு நிரந்தரமான உகந்த ஊதியம் கொடுக்க ஏற்பாடு செய்தல். மேலும், மறைமாவட்ட நிறுவனங்களில் பணியாற்றுவோருக்கு தகுந்த நியாயமான ஊதியம் கொடுத்தல்.
4. அருட்தந்தையர்கள் மற்றும் துறவறத்தாருக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த வகுப்புகள் நடத்துதல், அவர்கள் வழி பங்குகளிலும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
5. சிறைக் கைதிகளை சந்தித்தல்
6. ஏழைகளின் திருமணம் மற்றும் பிற நிகழ்வுகளுக்கு உதவுதல்

7. தீராநோயால் அவதியுறுவோரை கருத்தில் கொண்டு *நோய்த்தணிப்பு மையம்* தொடங்குதல் (Palliative Care unit)

## முன்மொழியப்பட்ட திட்டங்கள்

**பங்களவில் இரக்கத்தின் ஆண்டு செயல்பாடுகள்**

1. பங்குகளில் தொண்டு நிதி தொடங்கி, பங்குமக்கள் தங்கள் வருவாயின் 10% பங்களிப்பை தர ஊக்கப்படுத்துதல்.
2. வாரம்/மாதந்தோறும் நற்கருணை ஆராதனையில் பங்கேற்க ஊக்குவித்தல்
3. புனித இடங்களை சந்திக்கும் நோக்கில் வாய்ப்புகளை உருவாக்குதல்
4. நமது தொண்டு நிறுவனங்களை பக்த இயக்கங்கள் சந்திக்க ஏற்பாடு செய்தல்
5. இரக்கத்தின் ஆண்டு பணிக்குழு உருவாக்குதல், அக்குழுவை செயல்படவைத்து, மதிப்பீடு செய்தல்
6. பங்களவில் இரக்கதத்தை மையப்படுத்தி தியானம் நடத்துதல்
7. ஒப்புரவு அருளடையாளத்திற்கு, குறிப்பாக தவக்காலங்களில் முக்கியத்துவம் கொடுத்தல், இறைஇரக்கத்தைக் குறித்த வகுப்புகள் நடத்தி நல்ல ஒப்புரவு மேற்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துதல்
8. பங்களவில் நடத்தும் அனைத்து நிகழ்வுகளுக்கும் இறைஇரக்கத்தை மையப்பொருளாகக் கொள்ளுதல்.
9. ஆலயப் பணியாளர்களுக்கு உகந்த ஊதியம் கொடுக்க ஏற்பாடு செய்தல். மேலும், மறைமாவட்ட நிறுவனங்களில் பணியாற்றுவோருக்கு தகுந்த நியாயமான ஊதியம் கொடுத்தல்.
10. இரத்த தானம், உறுப்பு தானம் செய்ய ஊக்கப்படுத்துதல்
11. துயர் பேருண்மைகளை, செபமாலை செபத்தில் அதிகமாக பயன்படுத்துதல்
12. பக்த இயக்கங்களை சேவைப்பணியாற்ற ஊக்கப்படுத்துதல்
13. ஏழைகளின் திருமணம் மற்றும் பிற தேவைகளுக்காக சிறப்பு நன்கொடை பெறுதல்
14. இறைஇரக்கத்தில் வேரூன்றிய கிறிஸ்தவ வாழ்வு வாழ்தல், அதை பயிற்றுவித்தல்

15. இறைஇரக்கத்தை மையமாகக் கொண்டு குடும்ப வாழ்வை மேற்கொள்தல்
16. பிறருக்கு கொடுத்தல் மற்றும் பகிர்தலால் உளமடையும் மகிழ்வை குழந்தைகளுக்கு உணர வைத்தல்.

**புனித வின்சென்ட் தே பவுல் சபை**

1. இரத்த தானம், உறுப்பு தானம் செய்தல்
2. நோயாளிகள் மற்றும் ஏழைகளுக்கு உதவி செய்தல்
3. ஏழையரின் வீட்டு திருமணம் மற்றும் இதர நிகழ்வுகளில் உதவுதல்

**சிறுமலர் மிஷன்லீக்**

1. புனித ஃபவுஸ்டீனா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை தமிழாக்கம் செய்து வெளியிடுதல்.
2. இரக்கத்தின் ஆண்டு குறித்த கட்டுரைகளை *சிறுமலர்* இதழில் இடம்பெறச் செய்தல்
3. துயருறுவோருக்காக தொடர்ந்து செபமாலை செபித்தல்
4. குழந்தைகளுக்கு நன்னெறிகளை பயிற்றுவித்தல்
5. பிறரை துன்புறுத்தும் செயல்களை தவிர்த்தல்

**இளைஞர் இயக்கம்**

1. குறும்படம் வெளியிடுதல்,
2. மருத்துவமனை நோயாளிகளுக்கு இலவச உணவு வழங்க ஏற்பாடு செய்தல்.
3. மது மற்றும் போதை பழக்கங்களை முழுமையாக நீக்குதல், சட்டவிரோத செயல்களில் ஈடுபடாதிருத்தல்

**மறைக்கல்வி**

1. இரக்கத்தின் ஆண்டை மையப்பொருளாக வைத்து போட்டிகளை நடத்துதல்
2. இறைஇரக்கத்தை சித்திரிக்கும் நிகழ்வுகளை தயாரித்து நடத்துதல்.

**இரக்கத்தின் ஆண்டு நிறைவு விழா, நவம்பர் 20, 2016.**

அருட்தந்தை **டோஜி பறம்பில்பறம்பில்,**
இரக்கத்தின் ஆண்டு குழு ஒருங்கிணைப்பாளர்.

## சீரோமலபார் சபைநாள் காணிக்கை

| Sl.No | Place | Church Name | Amount |
|---|---|---|---|
| 1 | Anjugramam | St. Thomas | |
| 2 | Anamughom | Loretto Matha | |
| 3 | Anayadi | St. George | 200 |
| 4 | Annikkarai | St. Mathew's | 1500 |
| 5 | Arukani | Holy Family | |
| 6 | Athencode | St. Maria Goretti | 500 |
| 7 | Bengri | St. Benadict's | |
| 8 | Cheenivilai | Amala Maria | 250 |
| 9 | Chenamcode | Lourdu Matha Mission | |
| 10 | Chiristurajapuram | Christ the King | 1,800 |
| 11 | Kaliyal | St. Mary's | 4000 |
| 12 | Karode | St. Joseph's | 500 |
| 13 | Kattathurai | St. Michael's | 250 |
| 14 | Kalluvilai | Bld. Mother Theresa | 500 |
| 15 | Kaisalavilai | St.Xavier's | |
| 16 | Kazhuvanthittai | St. Martin de Porres | 1300 |
| 17 | Killiyoor | Deva Matha | 1000 |
| 18 | Kulasekaram | St. Joseph's | |
| 19 | Malaicode | Holy Cross | 2000 |
| 20 | Manjalumoodu | Little Flower | 2000 |
| 21 | Mankarai | St. James | 1000 |
| 22 | Marappady | St. Thomas | 1650 |
| 23 | Marthandam | St. Vincent de Paul | |
| 24 | Mathapuram | St. Thomas | 100 |
| 25 | Mekkarai | St. Thomas | 150 |
| 26 | Mezhacode | St. Francies Assisi | 1000 |
| 27 | Muzhucode | St. Thomas | 3000 |
| 28 | Mukkoottukal | Holy Family | 3000 |
| 29 | Munchirai | St. George | 1000 |
| 30 | Nagercoil | St. Alphonsa | 2000 |

| | | | |
|---|---|---|---|
| 31 | Netta | St. Thomas | 1500 |
| 32 | Nithravilai | Jeyamatha | 1000 |
| 33 | Pallikonam | Sacred Heart | 2000 |
| 34 | Padanthalumoodu | Sacred Heart | 1800 |
| 35 | Palappallam | Christ the King | 1000 |
| 36 | Palugal | St. Thomas | 3875 |
| 37 | Paraicode | Christ the King | 1000 |
| 38 | Pathukani | St. Thomas | |
| 39 | Penu | St. Mary's | 500 |
| 40 | Perunchilampu | St. Thomas Mission | 990 |
| 41 | Pilankalai | Little Flower | 1500 |
| 42 | Pilankarai | Loretto Matha | |
| 43 | Puliyarai | Little flower | 200 |
| 44 | Soosaipuram | St. Joseph's | 1500 |
| 45 | Thackalivilai | Holy Family | 500 |
| 46 | Thettiyode | St. Paul's | 1000 |
| 47 | Thettivilai | St. Michael's | |
| 48 | Thuckalay | St. Mary's | |
| 49 | Varuthattu | St. Xavier's | 1400 |
| 50 | Vayalinkarai | St. Antony's | 750 |
| 51 | Vanchinagar | Loretto Matha | |
| 52 | Valan Nagar | St. Joseph's | 400 |
| | | Total | 49615 |

அருட்திரு. மேத்யூ,
நிதிக் காப்பாளர்.

## BIRTHDAYS AND FEASTDAYS OF REV. FATHERS

Rev. Fr. Joseph Ottalankal MST — November 17

Rev. Fr. John Thekkel — November 20

**FEASTDAYS**

Rev. Fr. Christhudhas — November 22

# நற்செய்தி நிலையம்

"நான் கொடுக்கும் போதனை என்னுடையது அல்ல. அது என்னை அனுப்பியவருடையது" (யோவான் 7:16)

அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்

**விவிலியக் கலைவிழாப் போட்டிகள்**

2015-2016 ஆம் ஆண்டு விவிலியக் கலைவிழா இலக்கியப் போட்டிகள் மறைவட்ட அளவில் அக்டோபர் 11 ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணி வரை அந்தந்த மறைவட்டங்களில் வைத்து நடைபெற்றது. பங்களவில் முதலிடம் பெற்ற மாணவர்கள் இப்போட்டிகளில் பங்கேற்றனர்.

**தலைமையாசிரியர்களின் கூடுகை**

மறைக்கல்வி தலைமையாசிரியர்களின் கூடுகை அக்டோபர் 24 சனிக்கிழமை அன்று பிற்பகல் 2.30 மணிக்கு கல்லுவிளை மறைக்கல்வி அலுவலத்தில் இயக்குநர் அருட்தந்தை ஜஸ்டின் அவர்கள் தலைமையில் தூயஆவிப் பாடலுடன் ஆரம்பமானது. கூடுகையின்போது மறைவட்ட இலக்கியப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வாசிக்கப்பட்டது. மேலும் விவிலியக் கலைவிழா 2015 - 2016, விபரங்கள் அடங்கிய படிவமும் வழங்கப்பட்டது. கலைவிழாப் போட்டிகள் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது. பாடல் மற்றும் நடனப் போட்டிகளுக்கானபாடல்கள் அடங்கிய குறுந்தகடும் வழங்கப்பட்டது. முதல் பருவத்தேர்வுக்கான வினாத்தாள் வழங்கப்பட்டது.

**முதல் பருவத்தேர்வு**

வகுப்பு 1/2 முதல் 12 வரை அக்டோபர் 25 ஞாயிற்றுக்கிழமை அன்று அனைத்து மறைக்கல்வி நிலையங்களிலும் நடைபெற்றது.

**விவிலயிக் கலைவிழா**

2015-2016 ஆம் ஆண்டு விவிலியக் கலைவிழா இலக்கியப் போட்டிகள் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## 1. Students Competitions

### A. Parish Level

Date : Should be conducted before 15th November 2015

[Last date to submit the list of students and Script of One Act Play competitions at Catechetical Centre, Kalluvilai is on November 16, 2015]

### B. Forane Level

[Time : 9.00 a.m. – Registration.]

| | Forane Centre | Date | Place |
|---|---|---|---|
| 1. | Arukany | 26.12.2015 | Holy Family H.S.S. Arukany |
| 2. | Padanthalumoodu | 26.12.2015 | S.H. H.S.S., Padanthalumoodu |
| 3. | Manjalumoodu | 29.12.2015 | Holy Family H.S.S., Mukkuttukal |
| 4. | Thu - Pilankalai | 30.12.2015 | St. Michaels School, Kattathurai |
| 5. | Nithiravilai | 31.12.2015 | M.K.K.M., School, Varuthattu |
| 6. | Soosaipuram | 31.12.2015 | A.P.J.M. H.S.S., Soosaipuram |

### C. Diocesan Level

Date : 15.01.2016 Friday

Place : S.H.School, Padanthalumoodu

Time : 8.30 A.M. Registration

### 1. Group Items

| Section | Items |
|---|---|
| Boys & Girls | 1. Group Song - 5mts<br>2. One Act Play - 30mts |

## 2. Individual Items

| Section | Boys | | Girls | |
|---|---|---|---|---|
| **Sub Juniors** | 1. Single Song | 3 mts | 1. Single Song | 3 mts |
| | 2. Speech | 3 mts | 2. Speech | 3 mts |
| | 3. Bible Recitation | 3 mts | 3. Single Dance | |
| **Juniors** | 1. Single Song | 3 mts | 1. Single Song | 3 mts |
| | 2. Speech | 3 mts | 2. Speech | 3 mts |
| | 3. Bible Reading | 3 mts | 3. Single Dance | |
| **Seniors** | 1. Single Song | 3 mts | 1. Single Song | 3 mts |
| | 2. Speech | 3 mts | 2. Speech | 3 mts |
| | 3. Mono Act | 5 mts | 3. Mono Act | 5 mts |
| **Sup. Seniors** | 1. Single Song | 3 mts | 1. Single Song | 3 mts |
| | 2. Speech | 3 mts | 2. Speech | 3 mts |
| | 3. Mono Act | 5 mts | 3. Mono Act | 5 mts |

## 3. Topics

| Items | Section | Topics |
|---|---|---|
| Speech | Sub Juniors | அர்ப்பண வாழ்வின் அடையாளம் அன்னை மரியா |
| | Juniors | இறையை அடைய எளிய வழி துறவறமே |
| | Seniors | தூய வாழ்வின் ஊற்றுக்கண் துறவறமே |
| | Sup. Seniors | என் வாழ்வும் துறவறமும் |
| Mono Act | Sup.Seniors, Seniors B&G | புனித லூக்கா |
| Bib.Sent. Recitation | Sub Junior Boys | திருப்பாடல்கள் 30 : 1-7 |
| One Act Play | Boys | சாமுவேலின் அழைப்பு |
| One Act Play | Girls | எரேமியாவின் அழைப்பு |

## 2. Teachers

### A. Forane Level

Date : 26.01.2016

Place : S.H.School, Padanthalumoodu

Time : 9.00 A.M.

### B. Individual Items

| Section | Items | Section | Items |
|---|---|---|---|
| Gents | 1.Single Song -3mts<br>2. Speech -3mts<br>3. Bible Quiz | Ladies | 1.Single Song -3mts<br>2. Speech -3mts<br>3. Bible Quiz |


### C. Topics

| | | |
|---|---|---|
| 1. | Speech | இனிய இல்லறமும் ஒரு துறவறமே |
| 2. | Bible Quiz | 1) யூதா & திருவெளிப்பாடு - 90%<br>2) திருவிவிலியம் & பொதுவானவை - 10% |

**அருட்தந்தை ஜஸ்டின் செறுவேலில்,**
**இயக்குநர்.**

---

**Pope Francis**
# TWEETS



**Pope Francis** @Pontifex Sep 18
I ask you to join me in praying for my trip to Cuba and the United States. I need your prayers.



**Pope Francis** @Pontifex Sep 28
With my heartfelt thanks. May the love of Christ always guide the American people!

# குழந்தை ஈசோ இயக்கம்

“இறையாட்சியை சிறு பிள்ளையைப்போல் ஏற்றுக்கொள்ளாதோர் அதற்கு உட்பட மாட்டார் என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.” (லூக்கா 18:17)

பிலாங்காலை மறைவட்ட குழந்தை ஈசோ இயக்கத்தின் கருத்தரங்கானது 18.10.2015 அன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பிலாங்காலை புனித குழந்தை தெரசாள் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. பிலாங்காலை குழந்தைகள் இறைவணக்கப் பாடல்பாட செல்வி. ஜின்சி வரவேற்புரை கூறினார். பேரருட்தந்தை லூக்கா கொல்லம்பறம்பில் CMI அவர்கள் குத்துவிளக்கேற்றி இக்கூட்டத்தை தொடங்கி வைத்தார். அருட்தந்தை ஜோமோன் மங்கலாமடத்தில், அருட்தந்தை தோமஸ், அருட்சகோதரர் வினு, அருட்சகோதரி றோசிட் F.C.C. ஆகியோர்கள் கலந்து கொண்டார்கள்.

**வாழ்த்துரை**

பேரருட்தந்தை லூக்கா கொல்லம்பறம்பில் C.M.I. அவர்களுடைய Feast Day கொண்டாடப்பட்டது. பூ கொடுத்து தந்தை அவர்களுக்கு குழந்தை ஈசோ இயக்கம் சார்பில் வாழ்த்துரை வழங்கப்பட்டது.

தன்னை வாழ்த்திய குழந்தை ஈசோ இயக்கத்திற்கு நன்றி கூறிய தந்தை அவர்கள், “சிறு குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள்” என்ற இறைவார்த்தையின் மையக்கருத்தின் அடிப்படையில், குழந்தைகளுக்குப் பல அறிவுரைகள் கூறி, மலையாள மொழி பாடல்களைக் கற்பித்து, அனைவரையும் உற்சாகப்படுத்தி, மகிழ்ச்சியோடு வாழவும், நற்செய்திப் பணியைச் செய்யவும், குழந்தை ஈசோ இயக்கம் சிறந்து விளங்க வேண்டுமெனவும் வாழ்த்தினார்.

**வகுப்பு**

குழந்தைகளுக்கு அருட்சகோதரர் வினு, “குழந்தைகளை கடவுளின் விசுவாசத்தில் வளரச்செய்ய வேண்டும்” என்ற

மையக்கருத்தோடு திருத்தூதர்களைப் பற்றி விளக்கினார். இறைவசனங்களைக் கற்றுக்கொடுத்து, குழந்தைகளை அனைவர் முன்னிலையில் கூறச்செய்தார். செய்கைப்பாடல்கள் கற்றுக்கொடுத்து குழந்தைகளை உற்சாகப்படுத்தினார்.



'இயேசுவே நான் உம்மோடு பேசுகிறேன்'

'இயேசுவே நான் உம்மை நேசிக்கிறேன்'

'இயேசுவே என்னை ஆசீர்வதியும்'

'இயேசுவே எங்கள் வீட்டில் வந்து எங்களோடு பேசும்'

'இயேசுவே என்னை அன்பு செய்யும்' போன்ற மனவல்லிய ஜெபங்களைக் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுத்தார்.

**நன்றி**

மறைவட்ட அமைப்பாளர் அருட்சகோதரி ஜென்னி C.M.C. பிலாங்காலை பங்கின் அமைப்பாளர் அருட்சகோதரி ஜாண்சி F.C.C. ஆகியோர் இக்கருத்தரங்கு நடத்த தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் சிறப்புடன் செய்து எங்களுக்கு உறுதுணையாக நின்றனர்.

இறுதியில் பிலாங்காலை ஆனிமேட்டர் திருமதி ஷைலாமேரி நன்றி கூற, கருத்தரங்கு இனிதே நிறைவுற்றது.

**கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களின் விவரம்**

| | | | |
|---|---|---|---|
| பிலாங்காலை | - | 33 | குழந்தைகள் |
| காட்டாத்துறை | - | 19 | ” |

| | | | |
|---|---|---|---|
| கைசாலவிளை | - | 11 | ” |
| பரைக்கோடு | - | 7 | ” |
| தக்கலை | - | 7 | ” |
| கல்லுவிளை | - | 4 | ” |
| ஆனையடி | - | 3 | ” |
| சேனங்கோடு | - | 3 | ” |
| ஆசிரியர்கள் | - | 12 | நபர்கள் |
| அருட்சகோதரிகள் | - | 7 | ” |

குழந்தைகளை உற்சாகப்படுத்தும் வண்ணம் ஜெபமாலைகளும் மற்றும் படங்களும் வழங்கப்பட்டன.

அருட்தந்தை **ஜோமோன் மங்கலாமடத்தில்,**

இயக்குநர்.

---

## தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

**மறைவட்ட பொறுப்பாளர்கள் கூட்டம்**

இயக்கத்தின் மறைவட்ட பொறுப்பாளர்கள் கூட்டமானது 6-9-2015 அன்று படந்தாலுமூடு மறைவட்ட ஆலயத்தில் வைத்து இளைஞர் இயக்க இயக்குநர் தந்தை பெலிக்ஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தந்தை அவர்கள் அக்டோபர் மாதம் 2-ஆம் தேதி காந்தியடிகளின் நினைவு தினமான அன்று சங்கமத்தில் வைத்து நடைபெறும் அருட்பணிப் பேரவையின் போது இளைஞர்கள் இணைந்து மதுவிலக்கு உறுதிமொழி எடுக்க வேண்டும் என்று கூறினார். தொடர்ந்து அக்டோபர் 25-ஆம் தேதி அன்று இளைஞர் இயக்க ஆண்டுத் திட்டம் போடவும் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்ததாக இளைஞர் இயக்க ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டமானது 25-10-2015 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் 40 பேர் கலந்துகொண்டனர். இதில் இளைஞர் இயக்க ஆண்டுத் திட்டத்தை குறித்த கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

**மது ஒழிப்பு உறுதிமொழி**

இளைஞர் இயக்கம் சார்பில் காந்தி அடிகளின் நினைவான அக்டோபர் 2 வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 3 மணியளவில் ஆயர் தலைமையில், அருட்தந்தையர்கள், மேய்ப்பு பணி உறுப்பினர்கள் முன்னிலையில் மது ஒழிப்பிற்கான உறுதிமொழி எடுக்கப்பட்டது. இளைஞர் இயக்க உறுப்பினர்கள் எரியும் மெழுகுவர்த்தி ஏந்தி, ஆயர் உறுதிமொழி சொல்ல அனைத்து இளைஞர்களும் உறுதிமொழியை ஏற்றுக் கொண்டனர். சுமார் 30 மாணவர்கள் கலந்து கொண்டனர். அந்த மாணவர்களுக்கு ஆயர் அவர்கள் பாராட்டி மது ஒழிப்பிற்கான சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கினார். இந் நிகழ்ச்சியை இயக்குநர் அருட்தந்தை பெலிக்ஸ் SDB அவர்கள் ஒருங்கிணைத்தார்கள்.

செல்வி.அபிஷா, செயலர்.

---

# மரியாயின் சேனை

அன்னை மரியின் இனிய நாமத்தில் அனைவருக்கும் அன்பான வணக்கம்.

**செபமாலை திருப்பவனி:**

அக்டோபர் மாதம் அன்னையின் செபமாலையின் நறுமணம் வீசும் மாதம். நமது மறைமாவட்டத்தில் மரியாயின் சேனை தக்கலை கொமித்சியம் சார்பாக அன்னையோடு ஒரு பயணம் என்ற நோக்கில் 25-10-2015 ஞாயிறு மதியம் 2.30 மணிக்கு கைசாலவிளை புனித சவேரியார் ஆலயத்தில் இருந்து பிலாங்காலை புனித குழந்தை தெரசாள் மறை வட்ட ஆலயம் வரை ஜெபமாலை திருப்பவனி நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வரும் மரியாயின் சேனை கொமித்சிய ஆன்ம இயக்குநருமாகிய பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தொடக்க உரையாற்றி பேரணியைத் தொடங்கி வைத்தார்கள். பேரணியானது கைசாலவிளை, மேக்காமண்டபம் வழியாக பிலாங்காலை ஆலயத்தை

4.00 மணிக்கு வந்தடைந்தது. தொடர்ந்து வாழ்த்துக் கூட்டம் நடைபெற்றது. பிலாங்காலை மறைவட்ட பேரருட்தந்தை லூக்கா கொல்லம்பறம்பில் CMI அனைவரையும் வரவேற்றார்கள். மறைமாவட்ட அனைத்து அருட்தந்தையர்கள் சார்பாக இளைஞர் இயக்க இயக்குநர் அருட்தந்தை பெலிக்ஸ் மரியாயின் சேனையின் சிறப்பைக்கூறி வாழ்த்திப் பேசினார். கோட்டார் ரீஜிய தலைவர் சகோ. யூஜின் ஜெபமாலையின் சிறப்பை எடுத்துக்கூறி வாழ்த்திப் பேசினார்.



அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் குழித்துறை மறைமாவட்ட மேதகு ஆயர் ஜெரோம் தாஸ் வறுவேல் அவர்கள் மரியன்னை செய்தி வழங்கி அனைவருக்கும் இறை ஆசீர் வழங்கினார்கள். கொமித்சியத் தலைவர் சகோ. தோமஸ் பன்னீர் செல்வம் அனைவருக்கும் நன்றி கூறினார். கொமித்சிய துணைத் தலைவர். சகோ. பெஞ்சமின் போஸ் சேனை இறுதி ஜெபம் கூறினார்கள். நிகழ்ச்சியை கொமீத்சியச் செயலர் தொகுத்து வழங்கினார். செபமாலை பவனிக்கு அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், இறைமக்கள் திரளாக கலந்து கொண்டார்கள். பவனிக்கு எங்களை ஊக்கப்படுத்தி எல்லா ஒத்துழைப்பும் தந்த எங்கள் பாசமிகு மேதகு ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களுக்கும் அனைத்து அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், இறைமக்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சகோதரி **ஹேமா இயேசுராஜ்,**

செயலர்.

# வின்சென்ட் தே பவுல்

## தேசத்தோடு ஒருநாள்

தக்கலை மத்திய சபை சார்பில், மத்திய சபை இளைஞர்களின் ஒருங்கிணைப்பில் 'தேசத்தோடு ஒரு நாள்' என்ற மையச் சிந்தனையில் துப்புரவு முகாம் வெட்டுமணி அரசு மருத்துவமனையில் 02-10-2015 வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மத்திய சபை ஆன்மிக இயக்குநரும் குருகுல முதல்வருமான பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் இந்நிகழ்வை வாழ்த்தி தொடங்கி வைத்தார்கள். ஆறுகாணி, களியல், மஞ்சாலுமூடு, படந்தாலுமூடு, சூசைபுரம், பிலாங்காலை, நித்திரவிளை ஆகிய வட்டார சபைகளில் இருந்து இளைஞர்கள், ஆண்கள், பெண்கள் என அனைத்து தரப்பு வின்செந்தியர்களும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



மருத்துவமனை மற்றும் மருத்துவமனை வளாகத்தில் ஆர்வத்துடன் சுத்தம் செய்தது வின்செந்தியர்களின் தன்னார்வப் பணியை எடுத்துக் காட்டியது. இந்நிகழ்வில் வந்திருந்த அனைவரையும் மத்தியசபை தலைவர் சகோ. ஐயாத்துரை அவர்கள் வரவேற்றார். இளைஞர் பிரதிநிதி சகோ. பெர்லின் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். இந்நிகழ்வில் இந்திய தேசியசபை துணைத்தலைவர் சகோ. சௌந்தரராஜ், மத்தியசபை செயலர் சகோ. எட்வின்சன், பொருளர் சகோ. எபிதோமஸ் இளைஞர் சபை பிரதிநிதி சகோ. ஷாஜன் பள்ளிக்கோணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சகோ. **சுரேஷ்குமார்,**
செய்தித்தொடர்பாளர்.

# இல்வாழ்வு இயக்கம்

I. **மாதர் ஜோதிஸ்**

மாதர் ஜோதிஸ் நவம்பர் மாத சிந்தனை, ஊடகங்கள் ஆகும் (நவம்பர் 15).

- ஊடகங்களின் முக்கியத்துவம்.
- ஊடகங்கள் நன்மையா? தீமையா? விவாதிக்கவும்.

**திருப்பணி:** மாதர் ஜோதிஸ் சார்பில் ஒரு கிறிஸ்தவ மாத இதழ் வாங்கி படித்தல்.

**போட்டிகள்:** குழுவாக பிரித்து காகிதத்தில் ஏதாவது உபயோக பொருட்கள் செய்தல்.

**மறைவட்ட வினாடி வினாப் போட்டி**

ஆண்டுவிழாவிற்கு தயாரிப்பாக போட்டிகள் நடைபெற்றுகொண்டிருக்கின்றன.

நடைபெற வேண்டிய மறைவட்டங்கள்

நவ 8 படந்தாலுமூடு மாலை 3 மணி

நவ 15 சூசைபுரம் மாலை 3 மணி

நவ 22 தக்கலை பிலாங்காலை மாலை 3 மணி

II. **வந்து பாருங்கள் செபக்குழு**

வந்து பாருங்கள் செபக்குழுவின் வழிகாட்டுதலின்படி 100-ாவது ஒரு நாள் தியானம் பளுகல் ஆலயத்தில் அக்டோபர் 10 சனிக்கிழமையன்று நடைபெற்றது. பெயர்பெற்ற தியான குரு அருள்சகோதரர் பாப்பச்சன் பள்ளத்தில் அவர்கள் தியானத்தை வழிநடத்தினார். அடுத்த ஒரு நாள் தியானம் நவம்பர் 14 பளுகலில் நடைபெறும்.

III. **தசாம்சா கிளப்**

தசாம்ச கிளப்பின் அக்டோபர் மாத கூடுகை 11-ாம் தேதி திரு. பிபின் தக்கலை அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது. தசமபாகமாய் கிடைத்த ரூபாய் 12,000 நோயாளிகளின் மருத்துவ செலவிற்காக வழங்கப்பட்டது. அடுத்த கூடுகை சகோ. சசி

நெய்யாற்றின்கரை அவர்கள் இல்லத்தில் நடைபெறும்.

VI. **திருமண தயாரிப்பு பயிற்சி வகுப்புகள்**

திருமண தயாரிப்பு பயிற்சி வகுப்புகள் நவம்பர் 20,21,22 ஆகிய நாட்களில் சங்கமத்தில் நடைபெறும்.

## FAMILY APOSTLATE

**I. മാതൃജ്യോതിസ്**: നവംബർ മാസ പഠനവിഷയം "സമ്പർക്കമാധ്യമദിനം"

[നവം: 15ഞായർ] മാധ്യമങ്ങളുടെ പ്രാധാന്യം, മാധ്യമങ്ങൾ നന്മയോ തിന്മയോ ?

മക്കളും മാധ്യമങ്ങളും.

ദൗത്യം: മാതൃജ്യോതിസിന്റെ നേതൃത്വത്തിൽ ഒരു ക്രൈസ്തവ പ്രസിദ്ധീകരണം കുടുംബത്തിൽ നിർബന്ധമാക്കുക.

മത്സരം : ഗ്രൂപ്പുകളായി തിരിക്കുക, ഏതാനും പത്രങ്ങൾ കൊടുക്കുക, അതുകൊ്ഇഷ്ടമുള്ള സാധനങ്ങൾ ഉക്കുക.

ഫൊറോന ക്വിസ് മത്സരം : വാർഷിക മത്സരത്തിനു മുന്നോടിയായുള്ള ഫൊറോന മത്സരങ്ങൾ നടന്നുകൊിക്കുന്നു.

**ഇനി നടക്കുന്ന ഫൊറോനകൾ**

നവംബർ 8 ഞായർ - പടന്താലമൂട് ഫൊറോന - 3 pm

നവംബർ 15 ഞായർ - സുസൈപുരം ഫൊറോന -3 pm

നവംബർ 22 ഞായർ - തക്കല പ്ലാങ്കാല ഫൊറോന- 3 pm

**II വന്ത് പാരുങ്കൾ പ്രാർത്ഥന ഗ്രൂപ്പ് :** പ്രാർത്ഥനാഗ്രൂപ്പിന്റെ ആഭിമുഖ്യത്തിലുള്ള 100-ാമത് ഏകദിന ധ്യാനം ഒക്ടോബർ 10 ശനിയാഴ്ച പളുകൽ ചർച്ചിൽ വച്ച് നടന്നു. പ്രസിദ്ധ വചന പ്രഘോഷകൻ ബ്ര: പാപ്പച്ചൻ പള്ളത്ത് ശുശ്രൂഷകൾക്ക് നേതൃത്വം വഹിച്ചു. 500-ഓളം ദൈവമക്കൾ ശുശ്രൂഷയിൽ പങ്കുകൊ സഹകരിച്ച എല്ലാ പങ്കുകൾക്കും നന്ദി അറിയിക്കുന്നു. അടുത്ത ഏകദിന ധ്യാനം നവംബർ 14 ന് പളുങ്കൽഡ ചർച്ചിൽ നടക്കും.

**ദശാംശ ക്ലബ് :** ദൈവിക ദശാംശ ക്ലബിന്റെ ഒക്ടോബർ മാസ കൂട്ടായ്മ 11-ാം തീയതി ഞായറാഴ്ച്ച ബ്ര: ബിബിൻ തക്കലയുടെ ഭവനത്തിൽ നടന്നു. 12000/ രൂപ ദശാംശമായി ലഭിച്ചു. ഇതു ര്രോഗികളുടെ ചികിത്സക്കായി നൽകി. അടുത്ത ക്ലബ് യോഗം നവംബർ 15 ഞാറാഴ്ച്ച ബ്ര: ശശി നെയ്യാറ്റിൻകരയുടെ ഭവനത്തിൽ നടക്കും.

**വിവാഹ ഒരുക്ക സെമിനാർ :** അടുത്ത വിവാഹ ഒരുക്ക സെമിനാർ നവംബർ 20,21,22 തീയതികളിൽ തക്കല സംഗമത്തിൽ വച്ചു നടക്കും. വിവാഹിതരാകാൻ ആഗ്രഹിക്കുന്ന യുവതീയുവാക്കൾ മുൻകൂട്ടി കോഴ്സ് കൂടി ഒരുങ്ങിയിരിക്കേണ്ടതാണ്.

**ഫാ. ജോസഫ് നെടുംപുറം**

ഡയറക്ടർ

---

# புனித அல்போன்சா
# கலை மற்றும் அறிவியல் கல்லூரி

**டெங்கு விழிப்புணர்வுப் பேரணி:**

6-10-2015 செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு கல்லூரி சார்பாக டெங்கு விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது. கல்லூரித் தாளாளர் பேரருட்தந்தை டோம் குந்நும்புறம் அவர்கள் தலைமையில் கல்லூரி முதல்வர் டாக்டர் உஷா ஊமன் முன்னிலையில் கருங்கல் பேரூராட்சித் தலைவி திருமதி ஹெப்சிராணி பேரணியைத் தொடங்கி வைத்தார்.




கருங்கல் பேருந்து நிலையத்திலிருந்து கல்லூரி வளாகம் வரை நடைபெற்ற இப்பேரணியில் டெங்கு விழிப்புணர்வு பற்றிய வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகளை ஏந்திய மாணவர்கள் விழிப்புணர்வு முழக்கங்களோடு ஊர்வலமாக வந்த காட்சியை அனைவரும் கண்டு களித்தனர்.

**வணிகவியல் மன்ற விழா:**

9-10-2015 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரி வணிகவியல் துறை அரங்கில் வணிகவியல்துறை மாணவர்களுக்கானக் கருத்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. கல்லூரித்

தாளாளர் தலைமையில் கல்லூரி முதல்வர் வாழ்த்திப் பேசினார். நாகர்கோவில் தெ.தி. இந்துக்கல்லூரி வணிகவியல் துறைத் தலைவர் முனைவர் சிவசங்கரன் அவர்கள், தொழில் முனைவோருக்கான நல்ல வாய்ப்புகள் என்னும் தலைப்பில் செயல்விளக்கங்களோடு சிறப்புரை ஆற்றினார். வணிகவியல்துறை பேராசிரியர்கள் ஏற்பாடு செய்த இவ்விழாவில் அனைத்து மாணவர்களும் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

**கணித மன்றக் கருத்தாய்வுக்கூட்டம்:**

17-10-2015 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்குக் கல்லூரிக் கணிதக்கலையரங்கில் கணிதத்துறை சார்பாகக் கருத்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் தலைமை தாங்கிய இவ்விழாவில் தொலையாவட்டம் அன்னை வேளாங்கண்ணி கலை அறிவியல் கல்லூரி கணிதத்துறைத் தலைவர் டாக்டர் ஸ்டீபன் ஜாண் அவர்கள் கருத்துரை நிகழ்த்தினார். கணிதத்துறைப் பேராசிரியர்கள் ஏற்பாடு செய்த இவ்விழாவில் அனைத்து மாணவர்களும் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

**ஆங்கிலமன்றக் கருத்தாய்வுக் கூட்டம்:**

19-10-2015 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு ஆங்கிலத்துறை சார்பாக ஆங்கிலத்துறை கலையரங்கில் கருத்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் தலைமையுரை ஆற்றினார். ஆங்கிலத்துறைத் தலைவர் முனைவர் தோமஸ் அவர்கள் முன்னிலை வகித்தார். நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி ஆங்கிலத்துறைப் பேராசிரியர் முனைவர் சுரேஷ் அவர்கள் ஆங்கில செயல்விளக்கங்களோடு சிறப்புரை ஆற்றினார். மாணவ மாணவியர் ஆங்கில எழுத்தாளர்களின், கடல்சார் இலக்கியங்கள் பற்றிய நிகழ்வுகளை பல்சுவை நிகழ்வாக நடத்திக் காட்டினர். ஆங்கிலத்துறை சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விழாவில் ஏராளமான மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.

**தடகளப்போட்டிகளில் மாணவர் பங்கேற்பு:**

28,29,30-10-2015 நாட்களில் மதுரை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். விளையாட்டு அரங்கில் நடைபெற்ற பல்கலைக் கழகம் நடத்திய கல்லூரிகளுக்கிடையேயான தடகளப்போட்டிகளில் திரளான

மாணவர்கள் கலந்து கொண்டு பல்கலைக்கழக அளவில் 6-வது இடத்தில் முன்னேறி கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.

**ஆசிரியர் புலமை மேம்பாட்டு பயிற்சி:**

புனித அல்போன்சா கல்லூரியில் அக்டோபர் 28 மற்றும் 29, 2015 ஆகிய இரு தினங்கள் ஆசிரியர் புலமை மேம்பாட்டு பயிற்சி நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக முனைவர் வினோத் பாலகிருஷ்ணன், ஆங்கிலத்துறை பேராசிரியர் NIT,திருச்சிராப்பள்ளி அவர்கள் கலந்து கொண்டு ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தார். இப்பயிற்சியானது முதலாவது நாள் 28-10-2015 காலை 10 மணிக்கு இறைவணக்க பாடலுடன் தொடங்கியது. கல்லூரியின் தாளாளர் Rev.Fr. டோம் குந்நும்புறம் அவர்கள் பயிற்சியை துவங்கி வைத்தார். ஆங்கிலத்துறை பேராசிரியர் முனைவர் இ.இ.தோமஸ் அவர்கள் வரவேற்புரையாற்றினார். பின்னர் பயிற்சியானது சிறப்பு விருந்தினர் அவர்களால் அளிக்கப்பட்டது. ஆசிரியர்கள் ஆங்கில அறிவை எவ்வாறு வளர்த்துக் கொள்வது என்பது பற்றியும், அன்றாட வாழ்வில் ஆங்கிலத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றியும் பயிற்சியளிக்கப்பட்டது.


பயிற்சியின் இரண்டாம் நாள் 29-10-2015 ஆங்கிலத்தின் முக்கியத்துவம், ஒய்வு நேரத்தை எவ்வாறு பயனுள்ள வகையில் செலவிடுவது மற்றும் குழு கலந்தாய்வு ஆகியவை நடைபெற்றன. கல்லூரியின் தாளாளர் மற்றும் முதல்வர் அவர்கள் பயிற்சியை பற்றிய கருத்துக்களை எடுத்துரைத்தனர். பயிற்சியானது மாலை 3.30 மணியளவில் ஆங்கிலத்துறை பேராசிரியை திருமதி லெக்ஷ்மி தேவி அவர்களின் நன்றியுரையுடன் முடிவடைந்தது.

Fr. **ஆன்றனிஜோஸ்,**

இணைத் தாளாளர்.

---

## Pope Francis
# TWEETS



**Pope Francis** @Pontifex Sep 18
I ask you to join me in praying for my trip to Cuba and the United States. I need your prayers.

# முதல் வார்த்தைப்பாடு மற்றும் சபை உடையணிதல் திருச்சடங்கு நிகழ்ச்சி

"உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன் நீ எனக்குரியவன்"

பிரான்சிஸ்கன் கிளாரிஸ்ட் துறவற சபையின் இரு நவதுறவிகள் அஷீனா ரோஸ் மிஸ்டிகா மற்றும் மேஜீ இம்மானுவேல் என்பவர்களின் முதல் வார்த்தைப்பாடு மற்றும் சபை உடையணிதல் திருச்சடங்கு அக்டோபர் 10-ம் நாள் படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் வைத்து காலை 10 மணிக்கு நடைபெற்றது. இத்திருச்சடங்கிற்கு தலைமைதாங்கி, அர்ப்பண வாழ்வின் முக்கியத்துவத்தையும், தேவஅழைப்பின் மேன்மையையும் குறித்து



மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் மறையுரையாற்றினார். இத்திருச்சடங்கில் குருகுல முதல்வர் அருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் மற்றும் அருட்தந்தை லூக்கா கொல்லம்பறம்பில் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அருட்சகோதரி அஷீனா ரோஸ் மிஸ்டிகா அவர்கள் கோட்டாறு மறைமாவட்டம், ஆசாரிப்பள்ளம் புனித தஸ்நேவிஸ் மாதா ஆலயப் பங்கை சேர்ந்தவர். இவர் 1991-ம் ஆண்டு ஜனவரி 13-ம் நாள் கஸ்பார் ராஜ் - லூயிசாள் தம்பதிகளின் ஆறாவது மகளாக பிறந்தார். இவருடைய ஞானஸ்நானம் கிளைப்பங்காகிய புனித அந்தோணியார் ஆலயத்தில் நடைபெற்றது. இவருக்கு ஒரு மூத்த சகோதரனும் 5 மூத்த சகோதரிகளும் உள்ளார்கள். இவர்களில் மதிப்பிற்குரிய அருட்சகோதரி கிருபா ரோஸ் மற்றும் அருட்சகோதரி அமல் பிளஸ்ஸி தக்கலை மறைமாவட்டத்தில் கார்மேல் துறவற சபையின் உறுப்பினர்களாகவும், அருட்சகோதரி செராபின் பிரான்சிஸ்கன் கிளாரிஸ்ட் துறவற சபையின் San Joe Province-ன் உறுப்பினராகவும் உள்ளார்.

அருட்சகோதரி மேஜீ இம்மானுவேல் அவர்கள் தாமரசேரி மறைமாவட்டத்தில் St. Mary's Church மரியகிரி பங்கினை சேர்ந்தவர். குன்னத்தோட்டு இம்மானுவேல் மற்றும் தெரசியம்மா தம்பதிகளின்

3 குழந்தைகளில் முதலாவது பிறந்தவர். இவரின் இரண்டாவது தங்கை MSMI துறவற சபையில் பயிற்சி கால கட்டத்தில் உள்ளார்.

அர்ப்பண ஆண்டில் இவர்கள் தங்கள் வாழ்வை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணம் செய்துள்ளார்கள். இத்திருச்சடங்கில் அருட்தந்தையர்கள் பல்வேறு துறவற சபைகளை சார்ந்த மற்றும் அருட்கன்னியர்கள், உற்றார் உறவினர், நண்பர்கள் கலந்துகொண்டு நவதுறவறத்தாரை வாழ்த்தினர். தக்கலை மறைமாவட்டத்தில் இவர்களின் அன்பு பணி சிறக்க இவர்களை வாழ்த்துவோம், தொடர்ந்து செபிப்போம்.

---

## அருட்சகோதரர்களிடமிருந்து....

இறையன்பில் யாவருக்கும் வாழ்த்துக்கள்.

அருட்சகோதரர்களின் இரண்டாவது பருவக் கல்வியாண்டு தொடங்கி, நல்லமுறையில் வகுப்புகள் முன்னேறி வருகின்றன. முதல் பருவத் தேர்வில் எல்லா அருட்சகோதரர்களும் முதல்தர மதிப்பெண்ணுடன் வெற்றிபெற்று மறைமாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

### ஆயர் சந்திப்பு

முதல்பருவத் தேர்வு விடுமுறை கிடைத்த அருட்சகோதரர்கள் மற்றும் களப்பணியாற்றும் அருட்சகோதரர்கள் அனைவரும் அக்டோபர் 10 ஆம் தேதி மாலை3.30 மணியளவில் ஆயரைச் சந்தித்தனர். ஆயர் அவர்கள் அறிவுரை வழங்கியதோடு குருத்துவக் கல்லூரிகளின் சிறப்பியல்புகளையும், அனுபவங்களையும் குறித்து கலந்துரையாடினார்.

### குருத்துவ அருட்பொழிவு

திருத்தொண்டர் ரிட்டோ தூம்புங்கல் அவர்கள் டிசம்பர் 28 அன்று ஆயர் அவர்களால் குருவாக அருட்பொழிவு செய்யப்பட இருக்கிறார். இம்மாதம் 15ம் நாள் முதல் விடுமுறை பெற்று, தனது அருட்பொழிவுக்கான தயாரிப்பை மேற்கொள்கிறார். களப்பணியாற்றிய இடத்தில் ஆன்மீக வழிகாட்டியாக செயல்பட்ட அருட்தந்தை சஜி அவர்களுக்கு நன்றி. திருத்தொண்டர் அவர்களின் குருத்துவ வாழ்வு சிறப்புற இறைவனை வேண்டுவோம்.

வாராங்கல், பெங்களூர், சாத்னா குருத்துவக்கல்லூரிகளில்

முதல் பருவ தேர்வுகள் அக்டோபர் மாதத்தில் நடைபெற்று, இரண்டாம் பருவ வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

கோட்டையம் மற்றும் ஆலுவாயில் பயிலும் திருத்தொண்டர்கள் நவம்பர் 6 மற்றும் பூந்தமல்லியில் பயிலும் திருத்தொண்டர் நவம்பர் 1 ம் நாள் தங்கள் குருத்துவக் கல்வியை நிறைவு செய்து, நவம்பர் 7 முதல் திருத்தொண்டு களப்பபணியை மறைமாவட்டத்தில் தொடங்கஇருக்கின்றனர். அவர்களின் ஆன்மீக நலன்களுக்காக நாம் இறைவனை வேண்டுவோம்.

அருட்சகோ. **வினு**,
அருட்சகோதரர் தலைவர்.

---

# புனித பாத்திமா அன்னை ஆலயம் குடுக்கச்சிவிளை

சூசைபுரம் புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயத்தின் ஒரு பகுதியாகிய குடுக்கச்சிவிளையில் ஒரு புதிய மிஷன் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் பல வருடங்களாக இருந்து வந்தது. அதன் விளைவாக சூசைபுரம் பங்குத்தந்தை பேரருட்தந்தை ஆன்றனி



ஜோஸ் அவர்களால் குடுக்கச்சி விளையில் 12 சென்ட் நிலம் வாங்கப்பட்டு, அதில் ஒரு கட்டடம் கட்டப் பட்டது. அது 11-05-2015 அன்று நமது மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு அந்த

இடத்திற்கு பாத்திமாபுரம் என்ற பெயரும் வைக்கப் பட்டது. தொடர்ந்து அந்த கட்டடத்தை ஆலயமாக மாற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 13-10-2015 அன்று மாலை 6 மணிக்கு நமது மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களால் பலிபீடம் அர்ச்சிக்கப்பட்டு முதல் திருப்பலி நிறைவேற்றி பாத்திமா அன்னை ஆலயம் என்ற புதிய ஒரு ஆலயம் நமது மறைமாவட்டத்தில் உருவாக்கப்பட்டது. அன்று மறைமாவட்ட மறைத்தொண்டு பணிக்குழு இயக்குநர் அருட்தந்தை தோமஸ் தக்கலை, சூசைபுரம் மறைவட்ட அருட்தந்தையர்கள் மற்றும் அருட் கன்னியர்கள், மறைமாவட்ட மறைத் தொண்டுப் பணிக்குழு உறுப்பினர்கள், சூசைபுரம் பங்குமக்கள் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

எல்லா சனிக்கிழமையும் மாலை 6 மணிக்கு திருப்பலி இங்கு நடைபெற்று வருகிறது. புதிய பங்கு ஆலயம் உருவாக ஒத்துழைப்பு நல்கிய மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களுக்கும் ஆலய உருவாக்கத்தில் பெரும்பணி புரிந்த பங்குத்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்களுக்கும் அதற்கு உறுதுணையாயிருந்த உதவி பங்குத்தந்தை லின்ஸ்லால் மங்கலத்து அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

திரு. தோமஸ் பன்னீர் செல்வம்.

---

## திருப்பணியாளர்கள் பயிற்சி கருத்தரங்கு

தக்கலை மறைமாவட்டத்தின் படந்தாலுமூடு, நித்திரவிளை, மஞ்சாலுமூடு ஆகிய மறைவட்டப் பங்குகளிக்கு அக்டோபர் 1 வியாழக்கிழமை மற்றும் சூசைபுரம், தக்கலை, பிலாங்காலை ஆகிய மறைவட்டப் பங்குகளுக்கு அக்டோபர் 3 சனிக்கிழமையிலும் கல்லுவிளை TCYM வழிகாட்டி அலுவலகத்தில் இயக்குநர் தந்தை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. வியாழன் மற்றும் சனி ஆகிய நாட்களில் காலை 9.30 மணிக்கு ஜெபத்துடன் ஆரம்பமானது. 1.10.2015 வியாழக்கிழமை அன்று 9,10ஆம் வகுப்பில் பயிலும்

மாணவர்களை ஒருபிரிவாகவும் 11,12 ஆம் பயிலும் மாணவர்களை இன்னொரு பிரிவாகவும் பிரிக்கப்பட்டது. இதில் 60 மாணவர்கள் பங்கேற்றனர். அருட்கன்னியர்கள், றீத்தா, ஆனிமரியா, அருட்தந்தை பெலிக்ஸ், சகோ. சுஷா ஆகிய இவர்கள் மாணவர்கைளைப் பயிற்றுவித்தனர். 3.10.2015 சனிக்கிழமை அன்று 27 மாணவர்கள் சூசைபுரம், தக்கலை, பிலாங்காலை மறைவட்டத்திலிருந்து பங்கேற்றனர்.



அருட்கன்னியர் சுகுணா, ஆனிமரியா, அருட்தந்தை பெலிக்ஸ் ஆகியோர் மாணவர்களை ஊக்குவிக்கும் வண்ணம் குறும் படங்கள், பாடல்கள், விளையாட்டுகள், ஜெபம், இறையழைத்தல், பீடச்சிறுவர்களின் நற்பண்பு, ஆகியவற்றை பயிற்சியளித்தனர். பயிற்சி மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. வாழ்வியல் மதிப்பீடுகளை பற்றி தெரிந்து கொண்டார்கள். பிற்பகல் 1 மணியளவில் மதிய உணவு வழங்கப்பட்டது. பின்பு 1.30 மணியளவில் திருபணியாளர்கள் பெருஞ்சிலம்புக்குச் சென்றார்கள். அருட்தந்தை பெலிக்ஸ் அவர்களின் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அங்குள்ள, மாற்றுதிறனாளிகளை சந்தித்து அவர்களை மகிழ்விக்கும் வண்ணம் திருப்பணியாளர்கள் பல கலை நிகழ்ச்சிகள் நடத்தினார்கள். அனைத்து திருப்பணியாளர்களும் மாற்றுத் திறனாளிகளோடு தாங்கள் பெற்ற அனுபவத்தை பகிர்ந்துக் கொண்டார்கள்.

அருட்தந்தை **பெலிக்ஸ்**,

இயக்குநர்.

## BISHOP'S ENGAGEMENTS NOVEMBER 2015

| DATE | Day | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Sun | 2.00pm | CML Rally: Annikarai to Padanthalumoodu |
| | | 4.30pm | Priest conference Padanthalumoodu: |
| 2 | Mon | 11.30am | Meeting with Dr. Thomas Neduvelichalil\| Bishops house |
| 3 | Tue | 10.00am | Marappady: Golden Jubilee Mass of Sr. Jane |
| | | 5.00pm | Visit to Minor Seminary |
| 4 | Wed | | Bishop's House |
| 5 | Thu | | Bishop's House |
| 6 | Fri | 10.30am | Kudamaloor: Holy Qurbana |
| | | 1.15pm | Kakkanad: Syro-Malabar Assembly Meeting |
| 7 | Sat | | Bishop's House |
| **8** | **Sun** | **8.00am** | **Mukkoottukal: Pastoral Visit** |
| 9 | Mon | | Bishop's House |
| 10 | Tue | 10.00am | First Holy communion Qurbana: Kulasekaram |
| | | 4.15pm | Thuckalay: CMC new building blessing |
| 11 | Wed | | *Diocese Foundation Day* |
| | | 9.30am | Curia Meeting |
| 12 | Thu | 5.00 pm | College GB Meeting, Soosaipuram |
| 13 | Fri | 5.30pm | Palapallam: Holy Qurbana and Kurusady Blessing |
| 14 | Sat | 9.30am | Kalluvilai: Diocesan Day celebrations |
| **15** | **Sun** | | **Kanjirapally: Mission appeal** |
| 16 | Mon | 9.00am | Financial review by Mr Mittal |
| 17 | Tue | 6.15am | CMC chapter: Holy Qurbana |
| | | 9.00am | Financial review by Mr Mittal |
| 18 | Wed | | Visit to Shenkottai Mission |
| 19 | Thu | 5.30pm | Marthandam: Bp. Vincent's Jubilee Celebration |
| 20 | Fri | 4.15pm | Christurajapuram: Feast, Holy Qurbana |
| 21 | Sat | 5.30pm | Marthandam: Bp. Vincent's Jubilee Holy Qurbana |
| **22** | **Sun** | **8.00am** | **Muzhucode: Pastoral Visit** |
| | | **3.15pm** | **Thuckalay: St. Elias Church Jubilee Mass** |
| 23 | Mon | | Retreat (Personal) |
| 24 | Tue | | Retreat(Personal) |
| 25 | Wed | | Retreat(Personal) |
| 26 | Thu | 1:30pm | Retreat\|Thadikarankonam: FCC Convent Blessing |
| 27 | Fri | | Bishop's House>>Thalassery |
| 28 | Sat | | Vellarikundu, Thalassery |
| **29** | **Sun** | | **Vellarikundu, St. Jude Church Feast day Qurbana** |
| 30 | Mon | | Vellarikundu, Thalassery >>Thuckalay |

Fr. K. J. Antony SDB
*Diocese Secretary*

இறையருள் செய்திகள் மற்றும் விமர்சனங்களுக்கு
iraiarultkly@gmail.com